LC
N.33
78/06
DIGITIZ

625


22 JAN 1934

உ

அகஸ்திய மகாமுனி

அருளிச்செய்த

# குருநாடி - 235.



இ. இரங்கசாமிமுதலியார் சன்ஸ்

சென்னை

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்.

[illegible]] 1933 [அணா-8

செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட

மார்ச் மாதம் 1984 வருடம்

செப்பனிட்டு முடித்த

அக்டோபர் மாதம் 1984 வருடம்

ஆராய்ச்சி உதவியாளரின்
கையொப்பம்.

76706

LC
N33

LC
N33

உ

கடவுள் துணை

அகஸ்தியமகாமுனிவர் அருளிய

# குருநாடி சாஸ்திரம்

(இருநூற்றுமுப்பத்தைந்து)

OFFICE OF THE REGISTRAR OF ...
JAN 1934



ஆ. இரங்கசாமி முதலியார் சன்ஸ்

சென்னை

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பித்தது.

இதன் விலை] 1933 [அணா-4

கடவுள் துணை

அகஸ்திய மகாமுனிவர்

அருளிச்செய்த

# குருநாடி சாஸ்திரம்

இருநூற்றுமுப்பத்தைந்து

காப்பு

ஓங்காரங்கொண்டெழுந்து பிரணவத்தின்செய்கை
யுற்றுயிகச்ருத்திரமா புரைத்தவாறு
ஆங்காரங்கொண்டதோர் மனதைத்தேர்ந்து
அறிவுருவசொரூபமென்று மாந்தர்நேர்மை
பாங்கானநாடிநரம் பானவாறு
பழமறைதானுராய்ந்து பாடிவைத்தேன்
றீங்காதகணபதியுங் கந்தன்றானும்
நிசமாகவந்ததுவுங் காப்புதானே. 1

தானானநாடிநரம் பானசெய்கை
தாரணியில்மானிடர்செய் தர்மகர்மம்
ஊனானவுடலுயிராய்த் தேகமான
வுரையறிந்துவுதித்துநின்ற வுண்மைக்கியானம்
வானானநாடிவகைக் கெல்லாந்தன்னில்
வளம்பெறவேயொருநாடி மார்க்கங்கண்டு
தேனானகுருநாடி யாய்ந்துசொன்னேன்
தேவிமுதல்சிவனுடனே தெளிந்தகாப்பே. 2

வேறு

சீர்பெறுமுனிவர்வேதந் தெளிந்துபின் னுலகத்தோர்கள்
பேர்பெறுங்கருவிலுற்ற பிணிபலவுணர்ந்துதோய்ந்து
ஊர்பலநாடிக்கெல்லா முயர்பெருநாடிமூன்றில்
சேர்குருநாடிநேர்மை செயலுடன்கூறலுற்றேன். 3

உற்றிடுநாடிமூன்றி லுயர்நிலைக்குருவைப்பற்றி
நற்றிடுநரம்பின்செய்கை நன்மணிதாக்குப்போலே
பற்றிடுஞ்சுழினைதாக்கிப் பதிபசுபாசத்தூற்று
மற்றுள்ளமண்டலங்கள் மூன்றையும்மருவிநீளும். 4



நீளுமேவாதபித்த சிலேற்பனமூன்றுமேவி
வாளுமேயாக்கைகோத்து வளர்ந்திடுங்குருவாநாடி
கோளுமேவிளைந்துநோய்கள் கூடியிவாகச்செய்யும்
நாளுமேநடத்துஞ்செய்கை நவிலுவேனடிக்கேளே. 5

கேளெனச்சொன்னீரையா கிருபைவைத்தடியேன்கேட்கக்
கோளெனமருவிநிற்குஞ் சூட்சத்தைதொட்டுக்காட்டி
ஆளுமாநாடிக்கெல்லா மருள்பெருங்குருவாய்நாடி
சூளுமேவகைதானன்றாய்ச் சொல்லிநீர் துலக்குவீரே. 6

வாததோற்றம்

உற்றிடுமுலகத்தோர்க்கு வுறுபலவியாதியெல்லாம்
பற்றிடுங்குணங்கடன்னைப் பகர்ந்துரைசெய்யவேண்டில்
ஒத்திடுஞ்சனனவாறு முடலுயிரானவாறு
மத்திமாமலையில்வாழு மாமுனிவகுத்தார்தாமே. 7

தானெனுநாடிபத்தில் தரித்திடுநாடிமூன்றில்
கோனெனுங்குருவாய்நாடி கருவினில்தரித்தவோங்கி
பூனெனுமிணைமுநெய்பு முதிரமுஞ்சலமுமாகித்
தேனெனுந்தெளிவாயாடிச் செயலுடன்கூறலுற்றேன். 8

அலக்கவேவேதநாதன் தாண்டினைசுழினைகாட்டிப்
பெலக்கவேயிடைதான்வாதம் பிங்கலைபித்தமாகும்
நலக்கவேசுழிதான்சேத்மம் நலமுடன்வலமேமாதம்
கலக்கிடும்நதியேபித்த மையதுநீரதாமே. 9

ஆமிந்தப்பூதங்கேளு மமர்ந்திடும்வாதம்வாய்வு
ஓமிந்தப்பித்தந்தேய்வு வுற்றநல்லையந்தன்னில்
வாமிந்தவபரணவாத மருவியபிராணன்பித்தம்
தாமிந்தர்சமானன்சேத்மஞ் சாற்றினேன்சாரந்தானே. 10

சாற்றினேனிவர்கள்மூன்று லாக்கவுமழிக்கலாகும்
தோற்றிடும்வாதத்தாதி சுருதியாய்க்கருவிக்கெல்லாம்
மாத்திரையாகத்தானே வாசல்காப்பதுவேயாகும்
தோற்றிடுந்தொழிலுக்கெல்லாஞ் சித்துடன்சத்துமாமே. 11

வாதபித்தம்

ஆமிந்தநாடிதானு மறியெழுபத்திராயிரம்
தாமதுள்நாடிபத்துச் சகலவாதாரமாகி
நாமிந்தநாடியேழாய் நற்றிசைதோலெலும்பு
ஓமிந்தாத்தமூளை சுக்கிலமூன்றுமொன்றே. 12

ஒன்றதாநாடி தானு முடனாயிருனர்வதாகி
நின்றதாவாதபித்தஞ் சிலேற்பனமூன்றுமொன்று
என்றையேயுமப்புத்தோறு முறையின்னலாகிப்பின்னி
நின்றதேயிடைபிங்கலையாஞ் சுழிமுனைநடுவுமாமே. 13

சுழிமுனைநடுவாய்நின்ற சிலேற்பனத்தொழிலைக்கேளு
வழிவழியாகப்பித்தஞ் சிலேற்பனநெருங்கும்போது
அழிவதுபித்தநீங்கி வாதத்தைநெருக்கக்கொள்ளும்
பொழியவேவாதஞ்சென்று பிராணனைநெருங்கிக்கொள்ளும் 14

தள்ளுமேவியானன்சென்று வேரினையலைத்துமோதிப்
புள்ளுமேபழுத்துச்சாய்ந்தாற் போமதுசிவனங்கே
கொள்ளுமேமுன்செய்தர்ம கர்மத்துக்கீடாய்ச்சாகும்
தெள்ளுமேநாடிகூர்மை யின்னமும்புகலக்கேளே. 15

வேறு

ஓகழிந்தவுடலெடுக்குங் குறிப்புச்சொல்வே
னுறுதியாய்த்தகமுறி யுப்புதன்னை
வாகழிந்தமண்மலங்கள் மூன்றுக்குள்ளே
மருவிநின்றபதியசுவும் பாசமாகி
சூகழிந்தபிராணனொடு அபானங்கூடிச்
சுகமானசமானனுமாய் மூன்றுபேரும்
நாகழிந்தனிதங்களிலே யெடுத்துவாக்கை
நயசுகமுந் துக்கமுட னெடுத்தசென்மம். 16

சென்மமதுசெனித்தவுடன் முப்பாவந்தான்
திவினைக்குயீட்டாகிச் சென்மமாகிக்
கன்மமென்றுந்தர்மமென்றுங் கருவிப்புக்கிக்
கலந்துநின்றவன்னியொடு காலுநீரும்
உன்மமெனும்வாதபித்த சிலேற்பனமாகி
யூடுருவிப்பிராணனொ டபானன்றானும்
தன்மமெனுஞ்சமானனுமாய் மூன்றுபேருந்
தாரணியில்பரனுமா யானுமாச்சே. 17

ஆச்சதேயபானனது வாய்வுமாச்சு
அதன்மேலேயித்தமது கண்டேனயாகி
வாச்சதேசிலேற்பமமதுகப நீராகி
வகைமூன்றுவாழ்ந்தங்கே தொந்தமாகி
ஏச்சதேபலவினியும் பிணிகளைகபநீர்
எழுந்தபடியேயாகி யீடுமாகி



நாச்சுநாலாயிரத்து நாலூற்றுச்சொச்சம்
நவிலுங்குணம்புவியோர்க்கு நாட்டினாரே. 18

நாட்டினார்வாதத்தி லெழுந்தரோகம்
நலமொடுவாதமொடு வாய்வுகுன்மம்
கூட்டியேயுதிரத்தி லண்டவாய்வு
குடல்சடலவாய்வுபுக் கெழுந்துசுற்றம்
காட்டினார்விஷகடிகள் திமிருருட்சை
காதடைப்புப்புற்றுவகை கிராணிதோஷம்
மூட்டினார்கெர்ப்பத்தை கெடுத்தவாய்வு
மூன்றுவகைவிபரமறிந் தவன்வயித்தியனாமே. 19

ஆதற்றவாதபித்தம் சேத்மதொந்த
மதன்விபரவகைதெரிந்து நோய்க்குணமறிந்து
கோதற்றவாதிமகன் வயித்தியமேசெய்யில்
கூறுகண்டுசெந்தூரக் களங்குபற்பம்
தேதற்றதிராவகங்கள் செபநீர்செய்வான்
திறமுடனேநோய்தீர்த்துத் தொந்தஞ்செய்வான்
தாதுற்றபித்தத்தா லெழுந்தரோகஞ்
சாற்றுகிறேன்கருவறிந்து சார்ந்துபாரே. 20

கற்பத்தினால் பிறக்கும் விபரம்

பாரிந்தபித்தத்தா லெழுந்தரோகம்
பதமுடையகணையாலே யெலும்பைச்சார்ந்து
நேரிந்தசிரச்சூலை சோகைபாண்டு
நெற்றியின்கண்ணோயை நெடும்பாடோடே
சீரிந்தகிறுகிறுப்பு வுழலைதாகம்
கிராணியொடுபிரமேகம் கிருமிதோஷம்
சாரிந்தவுள்ரோகம் வெட்டைசூடு
சலக்கடுப்புமூளைமூலம் பவுத்திரமுந்தானே. 21

தானென்றகபத்தாலேயெழுந்தரோகஞ்
சாற்றக்கேள்சிலேத்மமென்னுந் தொண்ணூற்றாறும்
தேனென்றவிருமலொடு ஈளைகாசம்
சிரரோகங்கிராணிகங்கள் மண்டைரோகஞ்சூலை
ஊனென்றவாய்வலிப்பு முக்குநீர்காள்
உற்றசங்கண்ணினீர் புல்லங்காசம்
வானென்றமண்டையினோ யனேகமுண்டு
வகைவிபரம்மூன்றாமே வகுத்ததாமே. 22

## வாதபித்த சிலேத்பனம்

வகுத்ததொருவாதத்திற் பித்தங்கூடி
வாயுமொருசிரச்சூலை வழக்கமாகும்
மிகுத்ததொருபித்தத்தில் சேர்ந்தவாய்வு
வேகமுள்ளசலக்கழிச்ச லிரைச்சல்வாய்வு
எருத்தமிகுவாதமொடு காந்தல்குத்து
இளம்பிள்ளைவாதமொடு காந்தல்குத்து
சைத்தியமுமிருமல்சயஞ் சன்னிவாதம்
தலைதனிலேபலதோஷஞ் சாருந்தானே. 23

தானென்றவாதபித்த சிலேத்பனந்தான்
தலங்களிலேதொந்தித்தால் கூறுகண்டு
வானென்றமூவரினாற் றொருந்தமேற
வருங்குணத்தையாராய்ந்துணர்ந்து மனதிற்கண்டு
பானென்றவவிழ்தத்தின் பதங்கள்கண்டு
பார்ப்பவனேவயித்தியனும் பாருபாரு
தேனென்றநாடிகண்டு குணமுங்கண்டு
தெளிந்துணர்ந்துசெய்கைகண்டு செய்துபாரே. 24

பார்க்கையிலேபிணியதனை யறிந்தாயானால்
பரிவானமருந்தினுக்குப் பிணிதான் தீரும்
நோக்கையிலேபிணியதனை யறியாவிட்டால்
நோய்தீரமாட்டாது மருந்தேறாது
தாக்கையிலேகுருவினிட மனதுநொந்தால்
சண்டாளனாகியவன் தவறிப்போவான்
சேர்க்கையிலேகுருவுக்கு மனந்தான்மிக்க
செய்தவனேவயித்தியனுந் தெளிந்துபாரே. 25

பார்க்கையிலேசெனனமெடுத்ததாக கையாலென்
பதியவர்முன்செய்த தர்மகர்மம்
ஏற்கையிலேபெண்ணோடு புருஷன்சேரி
லிக்காயகிலேக்குமன்றே புரியட்டகத்தூடு
காக்கையிலேயிடகலைக்குச் சேடசமேபாயுந்
திறமுடனேயுடலுயிரா முறுதியாமே. 26

ஆமிதுவேசுக்கிலமே பெருத்ததானால்
ஆணாகுமதுகுறைந்து சுரோணிதந்தான்மீறில்



ஓமிதுவேபெண்ணாகு முறுதியாக
ஓகோகோமுன்செய்த கன்மத்தாலே
பூமிதுவேநோய்களெல்லாம் பூண்டுக்கொண்டு
புகுந்துணர்ந்துபிறப்பிறப்பு பூணுங்காயம்
நாமிதுவேகருக்குருவு முயக்கநேர்மை
நாடறியவெல்லார்க்கும் நவின்றவாறே. 27

வாறுகேள்மடவான செய்கைதானும்
வகைவியாமுன்செய்த கன்மத்தாலே
கூறுடனேயெதிகலையாற் கிருமியாலும்
கொஞ்சியதுவாயுவுடன் கலைத்திரவிமீதி
வீறுடனேவெட்டையினாற் பசியினாலும்
வேறுடனேகர்ப்பமது வழிந்துபோகும்
வாறுடனேமலடாகுங் கர்மத்தாலே
வந்தவகையிதுவென்ன வகுத்தூர்தாமே. 28

தானங்கேசுக்கிலந்தா னதுகுறளிப்பனிபோல்
தங்கியதுபதினைந்தில் பதைத்துக்காணும்
ஏனங்கேயிருபத்தா றுந்தாநாளில்
இயல்புடனோர்திங்கள்தனிற் றலையுவீடாகும்
வானங்கோண்டுதிங்களிற் றுமுடிவாகும்
வளர்மூன்றுதிங்களகை கரிண்டாகும்
வேனங்கேயைந்தாறில் விரல்நகங்கள்தோன்றும்
வேதாந்தம்பிண்டம்வளர் விபரமதுதானே. 29

தானேதானன்னையுண்ட வன்னமுந்தண்ணீருஞ்
சாந்தமாய்த்தொப்புள் தொடியூடேபுக்கி
பானரசவமுதமெனச் சேயுந்தோற்றும்
பாங்குடனேமாமாதங் குடனுதிரஞ்சேரும்
மானேகேளிந்தவகை வளர்த்தியான
வகைவிபரமன்றாக மானிடர்க்கு
வானவர்கள்முனிதேவர் கிருபையாலே
மாதவ்யுருவானவகை மாதஞ்சேரே. 30

வேறு

சேருமேயெட்டாமாதந் திறமுடன்சிறந்துமோதி
வருமேயுண்பதனை துள்ளறிவுண்டாமப்பால்
காருமேயொன்பதனாற் கருணையாம்பத்தில்நாடும் 31
தோறுமேபத்தாமாதம் பூமியிற்றொழுதுவீழும்

தொழுதுடன்வீழ்ந்தபோது தத்துவந்தொண்ணூற்றாறு
முழுதுடன்யாக்கையாகி முற்றுமேநரம்புநாடி
பழுவுறுதசைபெலும்புத் தாதுவும்பதிவாயொத்து
கொளுமதுதேகந்தன்னிற் கூறுநானுரைக்கக்கேளே. 32

நாடிநிலையறிய

கோட்டிடுநாடிதானு மிருநூற்றுநாற்பத்தைந்தில்
நாட்டிடுநாடிபத்து நயம்பெறுமேழுதானு
மூட்டிடுபஞ்சநாடி முற்றுமேபார்க்கும்போது
சாட்டிடுநாடிதானு மூன்றெனச்சாற்றலாமே. 33

சாற்றுவேனிடையேவாதம் பிங்கலைபித்தமாகும்
தேற்றுறேன்சுழினைதானுஞ் சிலேத்பனமென்னலாகும்
மாற்றுறேன்வலமேவாதம் வளர்ந்திடும்பித்தந்தியாம்
போற்றுறேனையந்தண்ணீர் பொருந்திடும்பானன்வாதம் 34

வாதமொன்றுரைத்தபின்பு மருவியபிராணன்பித்தம்
சாதமென்றுரைத்தசிலேத்பனஞ் சமானனுநோயதாகும்
போதமென்றவர்கள்மூன்று லாக்கவுமழிக்கலாகும்
வேதமென்றுரைத்தசெய்கை விளம்பினேன்புவியில்மாதே. 35

மாதவர்முனிவர்தேவர் வளர்ந்திடும்வானத்தோர்கள்
வேதவர்பத்தர்சித்த ரிருடிகண்மேல்நோய்சாராது
பாதகர்பிறவியெல்லா நோய்தனிலழுந்திமாள்வார்
காதலால்யோனியாசைத் தீமையாலிறப்பர்தாமே. 36

தாமதுஅசுவைகளாகுந் தருக்கியபோகத்தாலும்
போமதுபிறந்திறந்து புகுந்திடுநோய்க்கூட்டுக்குள்ளே
சோமதுகாமத்தாலே செனித்திடும்பிண்டஜென்மம்
நாமிதுவழியச்சொன்னேன் நாடிநீதெளிந்துதேரே. 37

தேறுவீர்கற்பங்கொண்டு சிதம்பரபூசைசெய்து
தாறுசீசத்திபூசை வைரவன்வீரவாகு
வேறுசீகணேசன்கந்தன் சிறப்புடனிவர்கள்பூசை
வேறுகேளுரைத்தமுன்னு லாய்ந்துமேசெய்யநன்றே. 38

## 4448-வியாதி தொகுப்புப் பெயர்கள்

நன்றெனவியாதிதானு நவிலுறேனைசமத்தில்
குன்றெனவளர்ந்தநோய்கள் சகலமுந்தொகையாய்ச்சொல்வேன்
அன்றெனவெழுந்தநாடி யெழுபத்திராயிரந்தான்
கன்றெனநாடிபத்துக் கருத்துருமேழுகாது. 39



தாதுவேபஞ்சபூத மதிலுறுநாடிமூன்று
சோதறுகுருவாநாடி குறிப்புடன்மேவிநின்று
தாதுமுசக்தத்தாது தசைநரம்பெலும்புதானும் 40
வேதுறுரோமமச்சை சுக்கிலநெய்யாம்பித்தம்.

பித்தநாற்பத்துநான்கு பெருவயிறெட்டதாகும்
உற்றதோர்பீலியெட்டு மோசியேமூன்றதாகும்
பெத்தவேசிலேற்பனந்தான் மிகுத்திடுந்தொண்ணூற்றாறு 41
மற்றுமேவாதரோகம் வகையுமெண்பத்துநாலே.

சன்னியும்பதினெட்டாகுந் தான்வலிநேத்திரந்தான்
உன்னியதொண்ணூற்றாறு முழவையுமூன்றதாகு
மின்னியபக்கசூலை மேவிடுமேழதாகும் 42
சென்னியில்வீக்கந்தானுஞ் சேர்ந்திடுமைந்துதானே.

பிளவையில்சிலந்திதானும் பெருந்துடனைம்பதாகும்
அளவிலாச்சுரமேகேளு வறுபத்துநாலதாகும்
களமிகபடுத்தும்பாண்டு தானுமேயஞ்சதாகும் 43
இளகியகுன்மமெட்டு மேந்தியவிக்கலாமே.

இந்திரகோபதோஷ மிருபதுமெழுபத்தாறும்
அந்திரவாயுசங்கை யாயிரத்தெட்டேயாகும்
தந்திரப்பார்வைதோஷந் தானுமேநூறதாகும் 44
மந்திரகுமிழியெட்டு மகோதரமீரெட்டாமே.

படுவன்முப்பத்திரண்டு பருவொருநாற்பத்தொன்று
முடுகிடும்விஷபமாறு முற்றுமோவுசிமூன்றுந்
திடுக்கிடும்பீலிமூன்று சிரசினிற்சிலந்திசொல்லில் 45
கடுகிடுமைம்பத்தாறு கரப்பானுமென்பத்தைந்தே.

திருக்குளோயொன்பதாகுங் கிரளும்விப்புருதிபத்தாம்
மிருக்கவேகிராணிதோஷ மாறுமேயிருபத்தொன்று
மிருக்கிடும்பிளவைதானு மேமெழுனுமிவையேசொல்லில் 46
சுருக்கிந்ததோஷந்தானுங் காணுமேநாற்பத்தாறே.

குட்டமும்பதினெட்டாகுங் குறைநோவுமெட்டதாகும்
கிட்டமாஞ்சூலையெட்டுச் சித்நியலாறதாகுங்
கட்டுநீரிழிவுசொன்னேந் தானுமேஇருபத்தொன்றும் 47
சிட்டமாம்விஷயமைந்துஞ் சேருங்காமாலையாறே.

மோகமுமிருபத்தொன்று மிகுயோனிச்சூலையெட்டுந்
தாகமுமார்பதாகுந் தனிரத்தபித்தமூன்றுஞ்

சோகையுமூன்றதாகுஞ் சூசிகாவாய்வுபத்தும்
ஆகத்தில்வீக்கமொன்பா னரையாப்புமூன்றதாமே.

ஆனதோர்நரம்புரோக மாயிரத்தொருநூறென்னும்
ஈனமாங்குக்கிரந்தானு மிருபதுபன்னிரண்டு
தானமாந்தண்டில்ரோகந் தானொருமூன்றதாகும்
கானமாங்குழலினுளே கசரோகமூன்றதாமே.

எலும்பினிற்பத்துரோக மீன்றொருபதென்றுசொல்லுங்
கலங்குமேபெருவயிற்றில் கலந்திடுநூறெட்டென்னுங்
குலுங்குமேதலைநோக்காடு குறித்திடுமைம்பத்தொன்பான்
நலங்குசேர்தலையின்மூளை நாற்பத்துரோகந்தானே.

மூன்றுமேயுகரரோக நூற்றெட்டுநாற்பத்தென்னும்
பற்றியநாக்கில்ரோகம் பன்னிரண்டாகுமென்னச்
சுற்றியகண்டமாலை சொல்லியதெட்டதாகும்
மற்றுமாநேத்திரரோக மைந்துடநாலதாமே.

காதினில்வியாதிகானுங் கருதிடுமிருபத்தெட்டும்
மார்பினில்நோயைந்தாகு மற்றொருநாலதாகும்
மாதியாநெற்றிரோக மஞ்சனுரோரிரண்டு
சோதியேயுதிரமண்டொலி சொற்படியிரண்டதாமே.

புண்ணினிற்சன்னியைந்து பொருந்தியலாழ்நீரைந்து
கண்ணியநாசிரோக நாலொடுமூன்றுமென்னத்
திண்ணியவாதமெட்டுஞ் சிரங்கணநாலதாகும்
பண்ணியரோகஞ்சூழ்ந்து பாரிற்கும்வாரதாமே.

காயாச்சுவாசமைந்து கதித்திடும்பவுத்திரமெட்டு
மாயமாமுனிவன்சொன்ன மூலமுமாறதாமே
சாயமுங்குஷ்டச்சிலந்தி தானொருமூன்றதாகும்
மாயமாமுனிவன்சொன்ன மூலமுழாறதாமே.

தேகத்தில்கழிச்சலைந்து திகழ்முலைகுத்துநாலும்
வகுத்தினில்புழுவேகேளு வளர்த்திடுமிருபதென்ன
மெகத்திடுமூர்ச்சுவாத மெய்யதேநாலாமென்ன
பகைத்திடுபதமிரண்டு பாய்ந்தபீநசமுநாலே.

மூத்திரக்கழிச்சல்நாலு முத்துநீரடைப்புநாலு
மாத்திரைப்பாதச்க்கரம் வந்திடுநாலாமென்னச்
சாத்திரப்படியேசொன்னேன் தந்தத்தில்வாயுவெட்டு
சூத்திரப்படியேயண்ட வாயுவுமேழதாமே.



மாந்தமுமெட்டதாகு மயக்கிடுமூர்ச்சையாகும்
சேர்ந்திடுபிள்ளைதோஷஞ் செப்பிடில்நூற்றெட்டாகும்
வளர்ந்திடுமடந்தாய்வாத சுரோணிதமேழதாகும்
தாழ்ந்திடுகன்னரோகந் தானொருவைந்தேயாகும் 57

அட்டையின்கடியின்மூன்று யானையின்கடிகள்மூன்று
நட்டுவக்காலிரண்டு நல்லதோர்விஷமுநாலு
தட்டிடுஞ்செந்தாமதானுந் தாக்கிடும்விஷமுமைந்து
பிஷ்டமாமெலிவிஷங்க ளீரொன்பதென்றுசொல்லும். 58

வேறு

கௌாககடிவிஷமுமூன்று சேர்ந்தமாறுயவிஷமஞ்சு
நாளாய்நரிகடியொன்றுகு நலமாங்கருவாய்விஷமூன்று
கௌாபெரும்புவிஷமைந்து மெருவாரக்கடிமூன்று
தேளாஞ்சந்தரிவிஷமூன்று திருக்கபுலிவிஷமைந்தாமே. 59

வேறு

எரிபுலிகடியேயெட்டு ஏனத்தின்விஷமிரண்டு
கரிபுநீர்க்கரடிதானுங் கடித்திடும்விஷமிரண்டு
பரிவுள்ளகுரங்குமந்திப் பலகடிவிஷமுமூன்று
விரிவுளசிறுபாம்புதானு மேவியேவிஷமுமூன்றே. 60

பூனையின்கடிகள்ரண்டு பேய்நரிவிஷமிரண்டு
சேனையிலுயுத்தஞ்செய்து தெரித்திடுங்குண்டுகாயம்
மானையேவென்றகண்ணாய் வல்லயக்குத்துக்காயம்
மீனையேகேளியொன்று விலாங்கதுமொன்றதாமே. 61

பிரங்கிகுண்டுகாயம் பெரியதோர்குத்துக்காயம்
கூரம்புபட்டகாயங் குலைப்படுவெட்டுக்காயம்
பாரங்கம்தன்னிற்சென்று பறைபெறக்குடலைப்பிறி
சூரங்கள்பண்ணிப்பிறிச் சூரியால்வகுத்தகாயம். 62

இப்படிமுசல்வலிப்பு எழில்மூன்றும்வகையாய்ச்சொன்னேன்
சொற்படியழித்துசெய்பி லதுவகைநாலாயிரந்தான்
ஒப்படிநாடிதானுங் குணங்களும்வருகும்லாறுஞ்
செப்படிரெண்டுங்கொள்ளத் திருவுளமருளிச்செய்தார். 63

நாடிதானியம்பக்கேளீர் நயமுடனறிந்துநீயும்
வாடியமன்னுளோர்க்கு வரும்வினைவியாதியாகிக்
காடியவியாதிதானுங் கதித்திடுங்கடினஞ்செய்யும்
கூடியவுலகோர்செய்கை தொகுத்துநானுரைக்கிறேனே. 64

உற்றதோருடலிற்கூறி உறுப்புடன்விரவிநின்று
முற்றுமேநோய்களெல்லா முதிர்பெறத்தோன்றும்போது
பற்றுமேவாதபித்த சிலேற்பனந்தன்னிலொன்றை
பற்றியேதோன்றுமென்று பகர்ந்தனர்முனிவர்தானே. 65

குருநாடி

கூறுவார்வேதநாதன் குருநாடிநேர்மையெல்லாம்
வீறுசெய்யுடலில்லாத பித்தமேதவேற்பனமூன்று
வாறுகண்டறியும்வண்ணம் வழுவாதநாடியொன்று
பேறுகொண்டெழுந்தநேர்மை பிரித்திடனுரைத்தார்மேலோர் 66

ஒருயிரைச்சேர்ந்து வுடலிடைவம்பைத்தோற்றி
ஓரெழுத்திராயிர நாடியேயிசைந்தபின்னுங்
கார்கரிமேகம்போலே கதித்திடும்வியாதியெல்லாம்
பேறுகொண்டெழுந்தநேர்மை பிரீதியாய்கேழ்க்கின்றேனே. 67

கேட்பதோர்வசனந்தன்னைக் கிருபைவைத்தடியார்க்கின்னம்
தாப்புரவகைகட்கெல்லாந் தனித்தனிகுணம்வெவ்வேறு
கூர்ப்புறவின்னதென்று குருவருள்செய்யவேண்டும்
ஆர்ப்பனதெளிந்தநன்று யருள்செய்வீரமரர்கோவே. 68

வேறு

நாளுவதோர்பிணிகள்வந்த வகைதானேது
நாடிசைந்திருந்தவிதம் நடுத்தானேது
அணுகியிருந்தெழுந்துவரும் நகைதானேது
ஆகவொருமுடிப்பிருந்த தலந்தானேது
பணிதியொடுவேரிருந்த பதிதானேது
பார்வைகுருடானபின்பு விருள்தானேது
தணிவுடனேபொருளிதனைக் குறித்துச்சாய்வீர்
சண்டாளப்பிணிகள்வந்த தலத்தைக்கூறே. 69

நணுகியதோர்பிணிகள்வந்த வகையேதென்னில்
நாடிவெகுபுசிப்பருந்தல் நயத்தினாலே
சிணுகுபெருந்தாபமறும் பிணிகள்யீரும்
தினமதிர்ந்துதின்பீராகில் பிணியோயில்லை
கொணுகுடனேஸ்திரீபோகஞ் செய்வீராகில்
கொடியபிணிமிகுதிவரும் குறையுந்தந்து



வணுவறிந்துபொசிப்பொருதிப் போகஞ்செய்தால்
வல்பிணிகளவரிடத்தில் வாராதென்றே. 70

நாடியிசைந்திருந்தவிடந் தசைநீர்கூடி
நாட்டமிடைபின்கலையுஞ் சுழினையும்பற்றி
தேடுபுனற்றீயோடு காற்றுங்கூடிச்
சேர்புத்தவாதமெனச் சேருமூவர்
ஆடியதோர்மாலயனு மாருமப்படியே
வாதபித்தசிலேற்பனமும் நேர்மையாகும்
ஓடிவருங்கரங்கடன்னி லூறுதியாக
வுற்றறிந்குருநாடியொன் றுகந்துபாரே. 71

மூலமுதலாதார மாறுஞ்சுற்றி
மூர்த்திநின்றபரவெளியில் தன்மையாகி
பாலமிருமீதேறிச் சுழினையூதி
பாதாளநாடியங்கு பதியும்வேறு
காலமதுவரும்போது கவரும்வீசம்
கத்திரிக்காய்போனருக்குங் காலைப்பற்றி
சீலமுடனொடுக்கம்வருங் காலந்தன்னில்
தெசவாயுபாரித்து அலைக்கும்வேரை. 72

அய்யாறுமாறுமங்கே யசைந்துபேர்ந்து
அண்டபகிரண்டமெல்லா மதிர்ந்துசாய்ந்து
மெய்யாறுதட்டுமங்கே யிடிந்துவீழும்
வேரிளகிப்போம்போது பிராணன்போகும்
பய்யாறும்பரவெளியு மிரண்டுபோகும்
பரமனாங்கிருந்து பகரும்போது
வெய்யேறுபுரவியும்போ மிருளுமாடும்
வேரிழைத்தவகையிலென்று விளம்பலாமே. 73

விளம்பலாம்வேரிருந்த தனத்தினாடே
மேவிநின்றபரவெளியிற் சமானமானத்
தளம்பெறவேகட்டிவைத்த மடிப்புமங்கே
சற்குருவின்வைப்பெடுத்த தலமுமங்கே
வளம்பெறவேவேரிருந்த விடத்தைக்கண்டால்
மன்னுகுருபரனருளே மருவுங்காலம்
மனம்பாசபசுபதியு மொன்றுங்காலம்
மார்க்கண்டநாதனென்று வகுக்கலாமே. 74

வேறு

விளம்புகிறேன் விபரமாக விலவியகிரந்தத்தாலே
வளம்பெறுமுப்பாவத்தால் மருவியபிணிகள் தீரும்
உளம்பியமனத்தாற்கைக்கைத உயர்பெரும்பெரியோர்தன்மை
களம்பெறுகிக்கைதசொன்னாற் சார்ந்திடும்பிணிகடானே. 75

குருவருள்விளம்பச்சென்று குவலயத்துள்ளமாந்தர்
திருவுளமனதிற்கற்றுத் திருத்தியேவேண்டிக்கொண்டு
கருவினையறியாமூடர் கற்றோரைத்தூஷணித்தல்
குருவினைகிக்கைதசொல்லக் கொடும்பிணியாலேமாள்வாய். 76

கற்றதோர்வித்தைபோச்சு சுருத்ததுமயங்கிப்பின்னும்
உற்றதோர்வறுமையாகி யுலகுளோர்நகைத்துப்பேசி
பித்தமும்பிரமைகொண்டு பேருலகதனிற்சென்று
சித்தமுந்தெளிவுமாறித் தெருவினிற்கிடப்பார்தானே. 77

குருவினைவணக்கஞ்செய்து கோருமற்பொருளையீய்ந்து
இருவினையறுக்கவேண்டி யெனக்குருதெய்வமென்று
ஒருவனுங்குருவையெண்ணி யுற்றனகொள்ளும்போது
அருவினையகன்றுநீங்கி யமருலகடைவர்தானே. 78

என்றதோர்சொல்லைக்கேட்டு மின்னமுமியம்பவேண்டாம்
நன்றுதானடியேனென்று நவிலுலகுள்ளோர்க்கெல்லாங்
குன்றுபோலெழுந்தரோகங் குலைந்திடவகைதான்
கன்றுதான்பசுவைத்தேடிக் கருதிடுமார்க்கஞ்சொல்வேன். 79

வேறு

நாடியென்றால்தசநாடிப் பத்துண்டாகும்
நலமுடனேயோர்விரலுக் கைந்துகாணும்
கூடியங்கேகைவிரலுங் குவிந்துநிற்குங்
குறிப்பறிவீரொருநாடி குசல்களெல்லாம்
ஆடிநிற்கும்விரலைந்து ஒன்றுக்குள்ளே
அதனுடையசூட்சமிதை வாதவீட்டில்
சாடிநிற்குமூவிரலு முருவிற்பாய்ந்து
சாதகமாய்நிற்குநிலை தன்னைப்பாரே. 80

மூலமுதலாதார மாறுஞ்சுற்றி
மூர்த்திநின்றபரவெளியில் முனையினூடே
பாலமெனுமீதேறிச் சுழினைப்பற்றிப்
பதிந்துநிற்குங்கத்தரிக்காய் மாறல்போல



சீலமுடன்தசநாடிநிலைப் பத்துமொன்றாய்ச்
சேர்ந்துநிற்கும்நாடிநிலை தேர்ந்துபார்க்கின்
ஞாலமதிலின்னதென் றறியலாகும்
நாதாந்தகுருவருளை நாடிப்பாரே. 81

அனுகிவரும்பிணியேதென் றறியவேண்டி
தாதாரமென்றதொரு சிரசில்வேரு
யனுகியேயீரலிட வகுப்புதன்னில்
பற்றியதோர்வேரதினால் பதியும்நோய்கள்
மனுகியேமூலமதில் குடலிற்பற்றி
மருவியதோர்வேவுகொண்டால் பிணிதான்தீரும்
நனுகியதோர்வாதபித்த சிலேற்பனத்தாலே
நவின்றகுணமும்மூன்றில் நாடுங்காணே. 82

தண்ணீரால்நெருப்பதனாற் கனத்தினாலுஞ்
சார்ந்தபிணியின்னதென நம்பிப்பார்க்க
உண்ணீராலமுதநிலை தனைச்சார்ந்த
யுற்றுநிற்குஞ்சிலேற்பனந்தா னுறுதியாக
உண்ணீராற்கர்மமென்ற சாலதன்னில்
இசைந்துநிற்கும்பித்தத்தின் சுரங்கள்சூலை
பண்ணீரால்மூலமென்ற குதத்தைப்பற்றிப்
பிரவியேநிற்குமது வரவுமாமே. 83

ஆதாரமாறுக்கும் நடுவேநின்ற
வப்பற்றிஅலம்புருட நாடியங்கேயசைய
கேதாரமூலத்தே யிருந்தநாதங்
கிளர்ந்துமெள்ளவூடுருவி மேலேசென்று
பாதாரவிந்தமங்கே சுழினைதாக்கிப்
பற்றிநின்றதசவாயு மொன்றாய்ச்சேர்ந்து
சூதானவீடுதான் தன்னிற்சென்று
சூட்சநிலைநின்றவிட முடிச்சதாமே. 84

முடிச்சென்றநரம்பெல்லாம் பிடரிற்சுற்றி
மும்மண்டலங்களுக்கு முதலாய்நின்று
துடிச்சவகைபிராணனோ டபானன்றனுந
தோன்றிடுமேலாதார மாறுஞ்சுற்றி.

வடிச்சிகின்றவாய்வங்கே யபானன்பற்றி
மார்க்கமதுபலவிதமா யலைக்கும்வேளை
தடுத்திருந்தபிராணனங்கே யேகுமென்று
சாற்றினார்மலைமுனிவர் தாணியோர்க்கே. 85

வாதமிருந்தெழுந்துவரும் வகைதானேது
வரிசையுடன்தானதின் வகைதானேது
பேதமுடன்பயித்தியங்கள் பிறந்ததேது
பிரமேகம்நீர்கடுப்புப் பொருள்தானேது
தானுவருஞ்சயித்தியங்கள் பிறந்ததேது
சாதுரியமகாதோஷம் வாய்த்ததேது
ஓதிவெகுசாத்திரங்கள் படிக்கும்பேரை
யுறுதியுடன்பொருளிதென் றுரைத்தான்சொல்லே. 86

வாதபித்தத்துக்கு விபரம்

வன்னியொடுகோலகுடி மண்ணைச்சார்ந்தால்
வாதமிகுமண்மிசையில் வாயுமீறும்
திண்ணமுடன்வானதிலே காற்றுந்தீயும்
சேர்ந்திடிமேல்பித்தமிகுஞ் சிரைப்பாரு
உன்னிஎழுசிலேற்பனந்தான் தண்ணீர்காற்று
உறுதியுடன்சுழிமுனையி லுற்றுவாங்கும்
சென்னியருள்புகழ்படைத்த முனிவன்சொன்ன
சித்தாந்தமதாகவே தெரிந்துகொள்ளே. 87

வேறு

சுழுனையும்பிராணன்தானுஞ் சுழன்றுதான்கலையைச்சாரில்
நளினமாந்தானுவிட்டு நற்சயிறுகவீசும்
கொளுமுனைபோலேகம்ப மெழுகடலுச்சியேறில்
சுழுனையந்தானுநின்ற மார்க்கமென்றறிந்திட்டாயே. 88

இருகரங்கால்பெருத்து வுறுப்புகள்தன்னிற்சேர்ந்து
பருவமாம்பிராணவாயு பற்றியேபிடையுங்கூடிக்
குருவெனப்பணிந்துபாணி தன்னையுமேற்கொண்டேதான்
மருவியசிலேற்பனசீதம் வருமெனவகுக்கலாமே. 89

அக்கியவுள்ளநாடி யபானனோடொத்துவாங்கில்
புக்கியமலசலாதி போற்கியமாகநின்று
வெக்கியமந்தந்தானும் மிகுந்திடுபசியினாலும்
அக்கினியெழுந்தபித்தம் வளர்ந்திடும்வகையிதாமே. 90



சன்னிப்பிறக்கும் விபரம் வேறு

சன்னியிருந்தெழுந்துவருந் தலந்தானேது
தானுவிழுந்தெழுந்திருந்த தன்மையேது
உன்னியொருசுரமிருந்த வகைதானேது
உடல்காச்சல்பிரமேக வுகமையேது
பொன்னியொருபருப்பிளவை புடைத்ததேது
புகையிருந்தசலமிருந்த பொருள்தானேது
இன்னதெனப்பண்டிதரே வகைதானுய்ந்து
இயம்புவீரிப்பொருளை யியம்புவீரே. 91

சன்னியிருந்தெழுந்துவரும் விபரமென்னில்
சாரமுடன்சிங்குவைதான் மூலஞ்சேரில்
வன்னியொருதண்ணீரும் வாயுங்கூடி
வழுதசிங்குவையகமோ டொத்துச்சார்ந்து
பின்னியெழுந்திடுவதுதான் சன்னியாகும்
பிரிவுடனேகாந்தாரி கழுனைப்பற்றித்
தன்னிலதுதணலெழும்பித் தானுவிம்முஞ்
சடத்துக்குப்பலங்குறையுந் தானுதானே. 92

ஏற்றமுள்ளவிடைநாடி கலையுஞ்சேர்ந்து
ஈடானவிஷநரம்பு தன்னைச்சாரில்
வாய்த்தவுடன்மாங்கிஷத்தில் வேவுகண்டு
வகையானவிஷநரம்பு மடங்கும்போது
சித்தமுடன்பருப்பிளவை யுடைத்துப்போகும்
திரமானவிஷநரம்பில் தமருமுண்டாய்
சாத்தமுடல்சீயும்ரத்தஞ் சகலமேவுஞ்
சங்கையில்லாவெகுவாறு சலமும்போமே. 93

சூலைவருங் குறி

நாடியிருந்திருந்தவிஷ நீர்தான்கூடி
நாட்டமிடபிங்கலையுஞ் சுழுனையும்பற்றித்
தேடியதோர்புரைதீயுங் காற்றுங்கூடிச்
சேர்பித்தவாதமென்று சேருமூவர்
ஆடியதோர்மாலயனு மரணமாகு
மப்படியேவாதபித்த சிலேற்பனநேர்மை
ஓடிவருங்கபமெண்ணி லுறுதியாக
உற்றுநிற்குநாடியொன்று வுகந்துபாரே. 94

சயரோகம்

மாயமாச்சயரோகம் வரும்வாறேது
மாற்றுமொருபீசனங்கள் வகைதானேது

வியனுகச்சூலையிருந் தெழுந்தபோது
வீறுடனேநீர்ச்செறிப்பு வினைமேது
பயமாகக்கனவுநினை வுற்றதேது
பார்த்திருக்கக்குணமெழுந்த பகைதானேது
நயமாகப்பொருளதென் னும் வகைதானேது
நன்மையுடன்பண்டிதரே நடுவதனைச்சொல்லே. 95

சயரோகமெழுந்தவகை சொல்லக்கேளீர்
தலைதனிலேகனமெழும்பி நீர்தான்வற்றி
மயமாகவிருபுறமுந் தமருண்டாகி
மதுரமென் னும்ருசியறிந்து வாய்நீரூறிச்
சுயமாகமண்டையில் நீரிறங்கச்
சுவாசமதுநெஞ்சில்வந்து கதறியோங்கும்
நயமறியச்சயரோகம் நடுங்குங்காலை
நன்மையுடன்பண்டிதரே நாடிப்பாரே. 96

பீசனந்தான்வரலாறு பொருளேதன்னில்
பேதமுற்றகனமெழுந்து வாயுசேர்ந்து
ஊனுருவிமண்டையிலே டொக்குப்பட்டு
உறுதியுடன்வாயுவங்கே யொத்துப்பின் னும்
பீனமுடனெருநீருஞ் சீயுமரத்தம்
பிடித்துவருங்காற்றோடு மூக்கினோடு
கானுருவிவந்ததுபோல் சலங்கலங்கிக்
காயவிழும்பீனசத்தின் செங்கைதானே. 97

சூலை

சூலைவரும்வாறதனைச் சொல்லக்கேளுஞ்
சுற்றியதோர்விசைநரம்பில் வேவுகண்டு
காலையுமேயூடுருவித் தமர்தான்விம்மிக்
களிப்பதுபோல்மாசுபற்ற யிரத்தம்வற்றி
மாலையதுபோலதொடுத்து நரம்பின்மீதே
வகையானவிசநரம்பை மடக்கிக்கொள்ளும்
கோலைவிட்டகுருடரைப்போல் தட்டழிந்து
குடிகெடுக்குஞ்சூலையது குறிகண்டீரே. 98

குன்மம்

குன்மமதுதானெழும்பும் விபரமென்னில்
குடல்தனிலேகல்லுமிக நெல்லுமூக்கும்
யின்பமுடன்வயிறுப்பிச் சோரைச்சார்ந்தாக்கால்
புரளுவதுகுடலோடே மாடுபற்றும்
அன்னமதுசெரிக்காது மாசினாலே
அதுவுயரம்வுமிமூக்குக் கிருமிபுக்கும்
வன்மலக்குயிலரளே குன்மரோகம்
மாசற்றுய்குன்மமறு வகைதான்பாரே. 99



சீர்பெறவேநீரிழிவு திறந்தானேது
சேர்க்கையுடன்தொந்தத்தில் வியாதியேது
பாரறியக்கலுமியினுற் புழுக்களேது
பண்புடனேவாதங்கள் பகைத்ததேது
பேர்பெறவேமூலத்தின் கடுப்புமேது
பிலமாகக்காமாலை பாண்டுவேது
கூர்பெறவேகுறிப்பறிந்து சொல்வீரென்னக்
கோமானேயிதுபொருளைக் கூறுவீரே. 100

சங்கையில்லாத்திரிபோகஞ் சார்ந்துயோசை
தானுருவியஸ்தியிலே தொங்கிப்பின்னை
பொங்கியதுவூனுருவித் தசையைச்சார்ந்தால்
புரைசித்துநாதமெல்லாம் பிரமைகெட்டு
கன்குலித்தபுழுப்போலே தேகமெல்லாம்
காரியங்கேளுள்ளுலர்ந்து கார்போல்நீரைப்
பங்கிலங்கேவிரியிட்ட நீரையெல்லாம்
பாழானவிஷநரம்பைப் பற்றிச்சாயம். 101

ஸ்திரீபோகஞ்செய்ததினால் வேவுகொண்டு
சிரசுமட்டும்வெந்துருகக் கனலேமீறிக்
குறியுடனேமேகந்தான் கொடுமைசெய்து
குறைந்துவருந்தாதுவெல்லாங் குன்றிப்போகும்
நெறியுடனேபால்செய்க விறைச்சிமீன்தான்
நெய்செத்தால்மிகுதிகொண்டால் நெருங்குமேகம்
அறிவுடனேதயிருமா மிசங்கடாலு
மடிக்கடியுண்பதுவு மேகந்தானே. 102

சாகைவரலாறதனைச் சாற்றக்கேளு
தருசுரத்தில்வாய்வெழும்பி யிரல்வெந்து
ஆகமெல்லாம்தெளுப்பேறி யிரத்தம்வற்றி
அடிவயிற்றிற்கனத்துமெள்ளக் கூம்பின்மாதே
மோகமுடன்தாதுகெட் டிளமாந்தைபோல
மூட்டிவருங்கும்பதிலே வேவுகொண்டு
தாகமுறும்பசிதணிந்து கைகாலோயுஞ்
சண்டாளகுணங்கள்செய்யுஞ் சோகைதானே. 103

சோகைக் குணம்

ஆதாரமாறுக்கு நடுவேநின்ற
அலம்புதசநாடியங்கே யசைவைப்பற்றிக்
கேதாரமூலத்தே நோக்கும்போது
கிரிச்சனமாம்வாயுவங்கே கீழேநோக்கும்
சூதகத்தில்வேவுகண்டு சுழுனையூடே
சுக்கிலத்தில்மனங்களிந்து ஊனும்வெந்து

பாதாரமூலத்தி லடுக்கும்மின்னே 104
பலவிதமாய்ச்சிழும்ரத்தஞ் சலமும்விழும்.

குருநாடி

அந்தரமாயிடைநாடி சிரத்திலேற
அப்பசுத்தூடுசென்று பாதத்தைமேவு
சுந்தமாய்வாய்வங்கே சிரத்திநாடு
சுறுக்கெனவேயிடையினொடு நாற்றங்கொண்டு
தந்தரமாய்த்தொந்தத்தில் பதியும்நோய்கள்
சலமுடனேசியும்ரத்தந் தொந்தமாக
குந்திரமாயுடல்குத்து நோய்கள்செய்யுங் 105
குறிப்பறிவீர்சிரச்சூலை குணமென்றோதே.
சீர்பெருகுநாயகனே வாயுபுத்திரா
திறமானவத்தியென்ற நாடியோடே
பாரறியக்கடினமுறும் வன்னியோடும்
பண்புடையசிரசங்கே பதிந்துபோகும்
வார்பெரியவாயுவங்கே கபாலந்தன்னில்
வகையானவிசைநரம்பை வளைத்துப்பற்றிக்
கார்பெருகிலரும்போலே யூனுருவிக்
காற்றதனில்வந்தடைக்கும் கருதிப்பாரே. 106
நாடியென்றால்தசநாடி பத்துண்டாகும்
நலமுடனேயோர்விரலி லிரண்டுநாடி
கூடியங்கேயைவிரலும் குவித்திருக்குங்
குறிப்பறிவீரொருநாடி குசல்களெல்லாம்
ஆடிநிற்கும்விரலைந்து ஒன்றுக்குள்ளே
அதனுடையசூட்சநிலை வாதவீட்டில்
நாடிநிற்குமாவில்மூன் றுருவாய்ப்பாய்ந்து
நாதகமாய்நின்ற தன்னைப்பாரே. 107

நாடிநிலையறிய

பரொன்றாலைந்துக்கும் நடுவதாகப்
பற்றிலன்றிவரலாறு தன்னைப்பார்க்கில்
சீரொன்றேபித்தத்தின் முன்னேநிற்கும்
தெசநாடிபத்துக்குந் தானாய்நிற்கும்
மேரொன்றால்நாதமென்று சொல்வார்மூடர்
மேவியங்கேபார்ப்பளவில் வேறாய்நிற்கும்
தார்கொண்டகுருநாடி தன்னையாய்ந்தால்
தன்வந்திரியவனென்று சாற்றலாமே. 108
பேர்பெரியகுருநாடி குணமேதன்னில்
புரண்டுவரும்வாதத்தி லட்டைபோலே
சீறியமிருமலிரு பத்தொன்றும்
தினவுசெறிமிகுதியுண்டாந் தேகம்வாடும்



சீர்தெரியபித்தத்தி லாமையாலே
தோன்றிடும்மேல்சுரமிருக்குஞ் சுற்றும்வாழ்நீ
கார்பெருகிவருவதுபோல் வேர்வைதோன்றுங் 109
கதித்திடுமேல்நீர்க்கடுக்குங் கைகாலோயும்.
சிலேற்பனத்திற்குருநாடி சிங்கம்போலச்
சீறிநிற்குமாமாகில் சன்னிதோன்றும்
ஆர்ப்பனத்தையூடுருவித் தோன்றுமாகில்
அசாத்தியமானகுறி தப்பாதப்பா
கார்ப்பெணவேகுன்றான்போல் குன்றிப்போகில்
கழியும்வயிர்கடுப்பெடுக்குங் கைகாலோயும்
தேர்ப்பதுவுமில்லையில்லை திட்டஞ்சொன்னேன் 110
தேர்ந்தகுருநாடிநிலை தோய்ந்துபாரே.
ஏற்றமுள்ளகுருநாடி தன்னைப்பார்க்கில்
இடைகலையும்பின்கலையும் மிசைந்துமாறி
மாற்றமில்லாச்சுழுமுனைதான் தன்னைப்பற்றி
மாறிநிற்குங்கத்தரிகை மாறல்போலே
சீற்றமுடன்வாதபித்த சிலேற்பனமொன்றே
தெசநாடிபத்துக்குந் தானாய்நின்று
கோத்தசிறுகுருநாடி நிலையைப்பார்க்கில் 111
கோமான்றன்றிருக்கூத்தைக் கூறலாமே.

குருநாடி உபதேசம்

அகாரமுதலைம்பத்தோ டெழுத்துந்தானும்
அஞ்செழுத்துமெட்டெழுத்து மதுவேயாகும்
விகாரமுதனிலைவிலொளி மதுவேயாகும்
விதமுடனேயாதார மாறுமாகும்
உகாரமுடன்தத்துவங்கள் தொண்ணூற்றாறு
மூர்ந்துநிற்குங்குருநாடி பொன்றுபோமே
சிகாரமெனுமட்சரத்தை நாடிவாசி 112
சிவமென்றநிலையறிந்து தெளிந்துபாரே.

குருபதேசம்

பார்க்கையிலேஐயுங்கிலியும் வசியமென்று
பற்றிநின்றமூலத்தி லூன்றிநின்ற
வற்கையுடனெட்டெழுத்தை ஓம்ஆங்உங்ரங்யநமசிவாவென்
றிடைபிங்கலையின் சுழுனையூடே
தாக்கையிலேசூரியன்போல் வட்டங்காணுந்
தாடணையாய்நடனமிடுந் தவத்தைக்கண்டு
ஆக்கமுடனவில்தங்க ளீவாயானால் 113
அரகராசிவசிவா அறிந்துநோக்கே.
அஞ்செழுத்தைமாறியங்கே மாறிமாறி
அஞ்செழுத்தைநெஞ்சில்வைத்து அருளைப்போற்றி

அஞ்செழுத்தைச்சடத்திலங்கே நிறுத்திக்கொண்டு
அருள்பெறவேயாயிரத்தெண் ணூறுந்தானேறி
அஞ்செழுத்தையுருவேற்றச் சித்தியாச்சு
அவுஷதமுஞ்சித்தியா மறிந்துநோக்க
அஞ்செழுத்தாற்கற்பமுண்ண யாக்கையழியாது
அரகராவிப்புதுமை யருமைதானே. 114

இந்தமுறைசெய்வதற்கு மருந்துசித்தி
இயல்பாகசடத்துக்குச் சுத்தியாச்சு
முந்தவேமந்திரத்தை வெளியிடாதே
முன்னுரைத்த நூலைப்போல் கொடுக்கவேண்டாம்
அந்தரத்திலெழுநாகில் வீழாதேநீ
ஆருக்குமிந் நூலை யீயவேண்டாம்
வந்தவந்தசீஷருக்குக் கொடுக்கவேண்டாம்.
வார்த்தையினாற்பகர்வார்தான் மெத்தவுண்டு
தொந்தமுடனுன்வயிற்றிற் பிறந்தபிள்ளை
தொடுகுறியுஞ்சொல்லியுடன் கொடுக்கநன்றே. 115

ஒன்றானசீஷனுக்கு நூல்தானீய
ஒருதாம்போல் நூறுதர மனத்தைச்சோதி
நன்றாகமனதிருந்தால் தனத்தைக்கேளு
நழுகியவர்போவரென்றால் நூலீயாதே
குன்றாகச்சொன்னதைத் தருவானாகில்
கொடுத்திடுநீ நூல்வாங்கு நாலத்தொன்று
மன்றானசீஷனுக்கு மந்திரமீயாதே
மனந்தெளிந்துகசட்டறால் மந்திரமீயே 116

அடுக்குமுதல்பொன்றருவே னென்பார்கள்ளர்
அவனுடையகள்ளமெல்லாம் அறிந்துக்கொண்டு
முடுக்கமுடன்வித்தையெல்லாங் கற்றுக்கொண்டு
முகம்பாரான்பொருளீயான் முன்னேநில்லான்
கடுக்கெனவேசொல்வான் வயித்தியங்கைவந்தால்
காலன்வலைக்குள்ளாவார் கசட்டுமாண்பர்
துடுக்குடனேயவனிடத்தில் சொல்லவேண்டாந்
துரோகியவன்படித்தவித்தை தூளாய்ப்போமே. 117

சீஷனென்றால்வகைகேளு தேன்போல்நெஞ்சந்
தெண்டனிட்டுப்பணிந்துமே கையுங்கூப்பிப்
பாசமுடன்குருவெனக்குத் தெய்வமென்று
பணிவிடைகளனுதினமும் பண்பாய்ச்செய்து
நேசமுடன்கனவிலுமே நினைவைவைத்து
நிலைமையுடன் தான்சொர்ணங் குருவுக்கீந்தோன்
வாசமுடன்குருகற்ற வித்தையெல்லாம்
வளர்ந்துமங்கேமலைபோலே செல்வமாமே. 118



செல்வமுடன்வித்தையுண்டாஞ் சிறப்புண்டாகுஞ்
செகத்திலேகண்டவர்க்குச் செல்வனாவான்
சொல்வதென்றால்வானவற்குஞ் சொல்லொண்ணாது
தொல்லுலகிலவனெனவுங் கருதியாகும்
கல்வியென்றகல்வியெல்லாங் கருத்திற்றோன்றுங்
கனிவினில்வைத்தியமுங் கைக்குள்ளாகும்
நல்லவனென்றுலகமெல்லாஞ் சொல்வார்சொல்வார்
நற்குருவின் மனந்தெளிந்தால் நன்மைதானே. 119

திருட்டினால்வந்ததொரு சீஷன்றானுஞ்
செகத்திலேபொய்யுரைத்து மெய்பேசாமல்
மருட்டினால்குருதேடி வருவான்மட்டி
வார்த்தையினால்வாய்ஞானம் பேசிக்கொண்டு
உருட்டதனால்குருபணத்தை மருட்டிக்கொண்டு
ஓகோகோவித்தையெல்லாங் கைக்குள்ளாக்கி
குருட்டானமாபாவி குருவுக்கென்று
கொடுக்காமல்மனதெரியக் கொண்டினனே. 120

வித்தைதனைதிருட்டாலே வேண்டிக்கொண்டு
விதமறியுங்குருவாசன் மனநோக
சத்தியந்தான்மறந்துவிட்ட சண்டாளன்றான்
தாரணியில்மானிடர்க்கு மருந்தையீந்தால்
சித்திதான்வாராது பிணிதான்மிஞ்சிச்
செகத்திலுள்ளபேர்களெல்லாம் நகைப்பார்தானும்
முத்தியும்வாராது மகாநோய்கொண்டு
முறையானவவன்குடும்ப முழுதும்போமே. 121

நாடியிடருட்சநிலை பகுந்துசொல்லே
நன்மணிக்கடைநாலு விரலைத்தொட்டு
கூடியதோர்மணிக்கட்டில் விரல்தான்போட்டு
கூறுடனேமூவிரலுங் குவித்துப்பார்க்கில்
தேடியதோராணுக்கு வலக்கரமேயாகுந்
திறமுடையமங்கையர்க்கு இடக்கரமேயாகும்
கூடியதோர்வாதபித்த சிலேற்பனத்துள்ளே
கொட்டிநிற்குங்குருநாடி துறந்துபாரே. 122

ஒன்றுக்குமெட்டாத நாடிநேர்மை
யூடுருவித்தாண்டிநிற்கு முண்மைகேளு
வண்டுதான்மதுவருந்து நேர்மைபோல்
வாதபித்தசிலேற்பனத்தில் மதுவுண்டாற்போல்
என்றைக்கும்வாதபித்த நடுவேநிற்கு
மேறுவதுங்குறைவது மில்லைசொன்னேன்

கன்றுக்குபால்சுரக்கும் பசுவைப்போலே 123
காத்திருக்குங்குருநாடிக் காலைப்பாரே.

குருநாடிநிலையறியாக் குருடரெல்லாங்
கூட்டமிட்டுச்சாத்திரம்பேய்க் குசல்கள்செல்வார்
குருநாடிவாதபித்த சிலேற்பனமூன்று
மத்திமமேதானறியார் வார்த்தைசொல்வார்
கருநாடிகுருநாடி யாகக்காணுங்
கைம்முறையாய்க்கருத்தொருமை காட்டக்காணும்
பெருநாடிசாஸ்திரத்திலே மயங்கிப்போவார் 124
பித்தரேகுருநாடி பின்னல்பாரே.

வாதபித்தமிரண்டுக்கும் நடுவேபார்க்கில்
மதுவுண்ணும்வண்டதுபோல் மத்தியத்தில்
போதமுற்றமூவிரலு முருவிப்பாய்ந்து
பூரணமாய்மூலமுத லுருவித்தாண்டிச்
சாதமுற்றவிஷுகரம்பி னூடுசென்று
சந்திரமண்டலமேவிச் சார்ந்துபின்னும்
நாதமுறைகுருநாடி யெங்குஞ்சுற்றி 125
நடுவில்வருபனோதனை நாடிப்பாரே.

நூலொன்றுந்தப்பாது கைகாட்டிக்கொண்டால்
நூதனமாய்ப்படித்தவர்கள் நுழையமாட்டார்
வாலென்றுந்தலையென்று மறியாமூடர்
வார்த்தையினால்மருட்டிவைப்பார் மற்றபேரை
சேலொன்றுமறியாத புத்தகப்பேய்
சிங்கத்தைநரியெதிர்த்த செய்கைபோல
மாலகன்றகுருநாடி தானும்சொல்லும் 126
மற்றொருவரெதிரினில் வழுத்தாங்காலே.

குருமுறையாய்க்குருநாடி தொட்டுக்காட்டிக்
கூறுகக்குருநாடி குலுங்கச்சொல்லித்
திருமுறையாமூவிரலுஞ் செய்கைசெப்பிச்
சித்தாந்தவேதாந்தஞ் சடத்திற்காட்டி
மருள்நாடியிருள்நாடி யிரண்டுந்தாண்டி
மாற்றமில்லாக்குருநாடி மதியுங்காட்டி
ஒருநாடிமூவிரலு முருவிநின்ற
உண்மையறிந்தவர்க்குநீ யுரைக்கொணுதே. 127

பராபரமாய்க்குருநாடி பண்ணிப்பார்க்கில்
பங்கமிடக்கீழ்மேலும் பகர்ந்தநேர்மை
தாராதரமாய்விரல்மூன்றுந் தன்னைப்பார்க்கில்
சாதகமாயோர்விரலுக் கைந்துகாணும்



நிராமயமாம்விரல்முனையு மிடமும்வாதம்
நின்றநடுபித்தமென நிறைந்துகாணும்
வராயகமேலேற்பவது வலமும்பின்னும் 128
வகைபார்க்கில்மூவிரலுஞ் சிரைப்பாரே.

வேறு

மன்னியமுன்கைகீழே மணிக்கடையதினுமப்பால்
பின்னியேபிரிமுறுக்காய் பெலத்துமுக்கணமுந்தோன்றிச்
சென்னியும்பிடரிற்சுற்றித் திசைதோறுங்கயிர்போல்வீசும் 129
என்னியேயெழுபத்தீரா யிரமுமுமுற்றதாமே.

உற்றதோர்வாதந்தன்னி லுறுதியாய்கீழுமேலும்
நத்தியேநாடிதானு நயம்பெறுமன்னங்கோழி
பற்றிடுமயிலும்போலப் படருநன்னாடியோடுஞ் 130
சித்துருமாமையட்டை தெண்டுடனேறுந்திபோலாம்.

சிலேற்பனநாடிதானுந் திரளுடன்சில்லூர்ப்பாம்பு
தாற்பெனத்தவளையூனி தயவுடம்சாடுமாப்போல்
காற்பெறுமிவைகள்மூன்று நாடியின்குறிப்புகண்டு 131
ஆர்ப்பனந்தெளிந்துநீயு மறிவுடனமர்ந்துநோக்கே.

திருநாடிநேர்மைசொல்லச் சிவனயன்மாலுமாகுங்
குருநாடியானவாறுங் கூர்ந்திடுகருவிற்றோன்றி
வருநாடியைந்துதானே வகுத்திடும்பூசமஞ்சு 132
உருநாடியத்துத்தானே யுறுபிணியேறிநிற்கும்.

எழுந்திடுஞ்சத்ததாது இயல்புடன்சொல்லக்கேளீர்
தழுந்திடுந்தோலெலும்பு தசையொடுநரம்புபச்சை
அழுந்திடும்யாக்கைமுற்றி யானதோர்தாதுநேர்மை 133
குழிந்திடுமயிர்நெய்யோடு சுக்கிலஞ்சிறுநீராமே.

இப்படித்திசையினாடி யெழும்பியேயிடையினோடு
சொற்படிகலையுமாறிச் சுழுனையுஞ்சுற்றிமாறி
முற்பனவீணையோடே மண்டலமூட்டியேங்கி 134
அப்படியந்திசிங்கி யலம்புடைபுருடனாமே.

ஆக்கியநாடிதானு மறுநான்குமொன்றுமாகில்
தாக்கியகருவிலாகித் தத்துவந்தன்னைச்சார்ந்து
ஏக்கியவெழுபத்தீ ராயிரம்நரம்பைச்சார்ந்து 135
கூக்கியபம்பரம்போல் குறுகிடுமனசைவைப்பாரே.

பம்பரமீதிலந்தக் கயிறுதான்சுற்றிவீசித்
தம்பரமாகத்தானே கிறுகிறுய்சுற்றிநிற்கில்
அம்பரமானவாத மதுவெனவறிந்துகொள்ளு 136
நம்பரப்பித்தந்தானு நடுநாராய்ச்சுற்றியோடும்.

உன்னியேயெழுந்தபோது ஒருசுற்றுருண்டுசுற்று
மன்னியேசுற்றிவீழ்ந்தால் சிலேற்பனங்குறியாகும்
தன்னியமரணம்பார்க்கில் எழுகிடுமுடனேவீழும்
மன்னியவயிறுபார்க்கி லப்படிவிசையைப்பாரே. 137

வயதுதானாறேயானால் மங்கையைமருவுநேரம்
சுகமதாய்சக்கிலந்தான் சுறுக்குடன்முறுக்கியேறும்
கயிறெனத்தொய்யவீழிற் கண்டிடும்பித்தஞ்சாகும்
வயிறுவிருபத்தஞ்சி வகுத்தறக்குறித்துப்பாரே. 138

ஒன்றுக்குமுக்காலாகி லாமதுதுறைந்துசாடும்
மன்றுக்குள்தனிலத்தாளில் வயதுமிப்படியேயாகும்
அன்றுக்குள்பாதிக்குள்ளே தொய்யவேயருகிவீழில்
புன்றுக்குமாரத்தோன்றும் வயதெனக்குறித்துப்பாரே. 139

இப்படியம்பார்த்தா னேற்றமுந்தாழ்ச்சிகண்டு
அப்படிநாடிதானு மமர்ந்திடுஞ்செய்கையாகும்
முற்படிமுன்னும்பாய்ந்து முழுதுமேகுறித்துப்பார்த்து
சொற்படிசெய்வாயானால் நாடியின்றொகுத்துத்தோன்றும். 140

வேறு

குருநாடிதிருநாடி குறிதான்மேலும்
கொண்டபஞ்சநாடியென்றுஞ் சத்ததாது
திருநாடியானதுவே திறமாய்த்தேர்ந்து
சித்தாந்தகுருநாடிச் சிரைப்பார்த்து
வருநாடிபஞ்சபூத நாடியென்றும்
வகுக்கலாந்தசநாடி வகுப்புமெத்த
கருநாடிகுருநாடி யாகக்காணும்
கண்டவர்க்குமெஞ்ஞானங் கருதலாமே. 141

பம்பரம்போற்குருநாடி கிறுகிறென்று
பற்றிநிற்கும்வாதபித்த நடுவிற்றானே
அம்பரம்போற்குமிழியெனும் வாதபித்த
பையமெனுநாடிமுத லியாவுமோடிக்
கம்மமுதல்மண்டலங்கள் மூன்றுஞ்சுற்றிக்
கத்தரிகைமாறலெனக் கட்டிச்சேர்ந்து
தம்பமுடன்வாதபித்தங் கருவிற்பாய்ந்து
தமரகம்போலோடிநிற்குந் தன்மைதானே. 142

தொண்டையிலேசோறிறங்குங் குழலைநோக்கிச்
சூட்சமுடன்கையைவைத்துச் சுகமாய்ப்பார்க்கில்
கொண்டெழும் வாதமெனும்நாடிதானே
கோழிக்குரல்போல்பார்த்தா லதுபோல்வாதம்
மண்டையிடிக்காரர்தலை கையைவைத்து
வகையுடனே தரிப்பதுபோ லதிரும்பித்தம்



தொண்டையிலேதவளைதனைப் பாம்புசென்று
உறுதியுடன்தின்றாற்போ லொக்குஞ்சிலேற்பம். 143

முன்னுரைத்தநூல்களெல்லா மினைத்துஞ்சொன்னேம்
முதுமொழிதான்கற்றவர்க ளறியலாகும்
நன்னூலாங்குருநாடி சேர்ந்தபேர்க்கு
நடுவெளிபோற்றேர்ந்துசொன்னேம் நாடியெல்லாம்
கன்னல்மொழிமாதுனக்கு எடுத்துசொன்னேன்
கருதியேபார்ப்பளவில் கடினமெத்த
பின்னலாய்வெகுகோடி பிரித்துச்சொன்னேம்
பாருடன்நீராராய்ந்து போற்றிக்கொள்ளே. 144

குருநாடிவாதத்தில் நிற்கும்போது
கொம்பசைந்தவாறிருக்குங் கூர்ந்துபாரு
குருநாடிபித்தத்தில் நிற்கும்போது
குயில்போலேவெதும்புமது குறிப்பைப்பாரு
குருநாடிசிலேற்பனத்தில் நிற்கும்போது
குளிர்ந்தசலம்போலிருக்குங் கூர்மைபாரு
குருநாடிமூன்றுக்குஞ் சரிபோல்நிற்கில்
கோகோவெனக்குமுறுங் குணத்தைப்பாரே. 145

மரணக்குறிப்பு

மரணமது அறிவதற்குக் குறிப்பைச்சொன்னேம்
வழுவாகவிசைநம்பு குலைந்துதானே
கிரணமென்னும்பொறிகளெல்லாந் தளர்ந்துமெத்த
விசைநரம்புதான்குலைந்து விரைந்துவாங்கி
நாணமெனப்பற்கடித்து மணியுநட்டு
நாவுலர்ந்துமூச்சடர்ந்து நடுங்கிக்காணும்
துரணமெனவாதபித்த சிலேற்பனமெல்லாந்
துடித்துவரும்விட்டிலைப்போற் றுடிக்குந்தானே. 146

சன்னியெழும்போதிலந்த நாடிமூன்றுஞ்
சாதகமாஞ்சுழல்வண்டு தண்ணீர்மேதே
உன்னியதுசுற்றிவரும் போலேயோடி
உள்ளிறங்கிப்படபடென முட்டியேறும்
மன்னியசிலேற்பனத்தில் நாடிதானும்
வழுவாமலெதிரேறி வாதவீட்டில்
பின்னியதுவாதத்தை யழுத்தித்தாழ்ந்து
பேதிக்கில்மரணமென்று பிடித்துச்சொல்லே. 147

வேறு

சூத்திரநடுவேதோன்றி விலங்கியேயகலுஞ்சிவன்
மாத்திரைமணியியம்போ லதுதோன்றிநிற்குஞ்சிவன்
வேற்றுருக்கண்கள்ரண்டு மணியதுநட்டுநின்றால்
யாற்றிரைமூன்றிலுள்ளே யகன்றுபோமெல்லிநல்லாய். 148

நெற்றியில்நரம்பிரண்டும் நீலமாய்க்கவர்போல்தோன்றில்
அற்றிடும்தேகம்விட்டே ஆறுமாத்திரையிற்சாவு
சுற்றியவளையம்போன்று சூழ்வாறுதலில்நீளம்
பற்றியேகாணுமாகிற் பகரஞ்சுதிங்களேமே. 149

பத்தியாய்க்கண்டம்நொந்து பதைத்துமேயடிப்புமுண்டாம்
வற்றியேவெளுத்துக்காயும் வரையதுசுருங்கலாகி
இற்றியபுருவந்தாழ்ந்து புருவத்தின்மையம்நீளிற்
சத்தியம்மாதம்நாலில் தருணத்தில்மரணமாமே. 150

பெருக்கவேமுகங்கறுக்கிப் புலால்போலாய்மூத்திரத்தில்
திருக்கைபோல்மடநல்லாளே திங்கள்மூன்றதனிற்சாவு
வருக்கவே,முகம்பெருத்து வகையுடன்வெளுக்குமாகில்
மருக்கவேதிங்கள்தன்னில் மரணமுங்காணுகானே. 151

முகத்தடிபெருத்துக்கொண்டு முகமெல்லாம்வெளுப்புமாகி
நிகத்தமாய்ப்புருவங்காணில் நெறியானமாதமிரண்டாய்
அகத்தினிலுணர்வுமுற்று மடிக்கடிசுவாசமூட்டில்
செகத்தினிலறியச்சொன்னோம் சிவனுமகனுந்தானே. 152

நாழியின்சுழியிரண்டில் நடுச்சுழியோங்குமாகில்
பேசியசிவன்விட்டுப் பிரியநாள்முப்பத்தொன்றே
மாசறுவிழிகள்மூக்கு வற்றியேகருத்துக்காணில்
ஊசலிலெதிர்த்தார்போல உடம்பைவிட்டுயிரும்போமே. 153

வார்த்தைநான்சொல்லும்போது மார்புக்குள்ளடைத்தாற்போல
ஊர்த்தமாயெழும்பாதாகி லுயிர்விடுமாதமூன்றில்
சேர்த்துறைசெய்யிலற்ற திடிமன்னர்தங்கள்போலச்
சார்த்தினேன்மாதம்ரண்டிற் சடத்துயரகலுந்தானே. 154

சொல்லிலேநாத்தடித்துச் சொற்றடுமாறுமாகில்
மெல்லநாவரட்சிகாணில் வீழ்வதுமாதமூன்றில்
மல்லெனவரைக்கவுந்தான் மந்தமாய்மக்கமாகில்
அல்லிலுங்குழலாமென்றே யடைந்திடுமரணந்தானே. 155

மேனியுமிகப்பெருத்து விம்மியேகழிந்துபின்னும்
பூனிலாச்சோகமாகில் ஒருவருஷத்திற்சாவான்
பானநீருடலிற்றுவிப் பாவையினுடல்போற்காணில்
ஆனியாமாதம்பத்து வருமாதமென்றுகூறே. 156

மெய்யெல்லாம்பசுமையாகி யிறைந்திடுமயமுமாகிக்
கையடிசுருங்கிக்காணிற் கருதவெண்மாதஞ்சாவான்
நெய்மயம்வேர்வைகண்டு நெஞ்சுயர்ந்திருபால்வற்றித்
துய்யதோர்ரூபமாறில் துயர்வருமாதமாதே. 157

உருவிரல்மேலெலும்பு மிரண்டுமேபுன்னிக்காணில்
இரைசெய்யுமாதமூன்றி லுயிரதுமரணமாகும்



மருவியகண்டம்நீண்டு வற்றியேமிடருந்தாழ்ந்து
திரையெனத்தோற்சுருங்கில் செப்புவார்மாதம்ரெண்டே. 158

பொருத்தெல்லாம்நெகிழ்ந்துகாணில் போர்கழன்றிருக்குமாகில்
துருத்தம்போலெய்ப்புகாணில் துஞ்சுவார்மாதமொன்றில்
குருத்திரள்நடத்தில்தன்னில் எழும்பவத்தியக்கங்காணில்
வருத்தமாய்த்துயரங்காணில் மரணம்பத்திருநாளொன்றே. 159

காயத்திலடிசுருண்டு கருத்துத்தோற்சுருங்கிக்காணில்
பேயொத்தநிறமுமானால் பிரியுநாள்பத்திற்சீவன்
நோயற்றேரெனிலுமேனி நுடங்கியேமார்புதாழ்ந்து
ஒய்வுற்றுப்பதறிக்காணி லொடுங்குமேயுயிர்நாளஞ்சில். 160

கண்டத்தில்நரம்பிரண்டுங் கதிக்கவேவிரைக்குமாதல்
பிண்டத்தில்சீவன்விட்டுப் பிரியுநாளாறுமென்க
தண்டொத்துக்கரையேழுந் தடித்ததுவயர்ந்துகாட்டில்
பண்டொத்ததருணத்தாதும் பகரிருநாளில்வீழ்வார். 161

உடம்பெல்லாம்பதறிக்காணி லுன்னடியுன்னித்தாளில்
நடந்திடில்கால்பின்சாயில் நாலொன்றிற்சாவார்திண்ணம்
திடம்படவிருக்கினுந்தான் தேகமேகுறுகிக்காணில்
யிடம்பயில்கண்ணினாளே வீழுநாளஞ்சுதானே. 162

மலத்துடனெய்தாம்போல வரிநீலம்போலேவீழ்ந்தால்
உலத்தியசடத்தைவிட்டு உயிர்நீங்குமாதமாறில்
கொலைக்கொடியணங்கிநல்லாய் குமுக்கெனச்சோரைவீழில்
சலத்தகுமாதமஞ்சில் சாவதுவுண்மையாமே. 163

அரைத்தசோறதுபோல்வீழி லவிழ்தமுஞ்செய்யிற்றீரா
திரைத்திடுந்திங்களொலி லேகிடுமானமென்க
கரைத்திடுங்கூள்போல்வீழ்ந்து கலங்கியேபொருமுமாகில்
உரைப்பதுமாதமூன்றி லொடுங்கிடுமுயிருந்தானே. 164

வெள்ளைதானிரைந்துவீழ்ந்து விலாவுள்ளேசொருகிக்குத்திச்
சுள்ளெனநெஞ்சிற்றுவில் துருவறமாதம்ரெண்டில்
கள்ளெனத்துறையிற்கம்பங் கஞ்சிபோற்கழியுமாகில்
எள்ளிடுமாதமந்தத் தியல்பென்றுசொல்லுவாரே. 165

நினைக்குமுன்சுளியுமாகில் நீர்நிறங்கரியைப்போலத்
தினைப்படிசுழியுமாகில் செய்யுநாளிருபதென்க
பனிச்சலமன்னன்வீழ்ந்து பன்றிநெய்படர்ந்ததொத்தால்
மனத்தினிலென்னவேண்டா மரணநாள்பதினொன்றே. 166

குக்குடத்தேசம்போன்று குருந்தினையரிசிபோலும்
ஒக்கவேயிரத்தஞ்சீழு மோடிடில்நாள்பத்தாகும்
தொக்குளேசுருங்கிக்கொண்டு துருத்திநீரன்னம்வீழ்ந்து
மிக்கதோர்மயக்கமாகில் வீழும்நாளேழாமென்னே. 167

எடுத்திடுங்கழிச்சலற்று இறக்கிப்பின்கழிந்துள்ளாகி
நடுக்கியேமயங்கிக்காணில் நவிலுவார்நாலஞ்சேதான்
உடைத்தகூழ்முட்டையேபோல் ஊன்வெடிநாற்றம்நாறில்
அடிக்கடிசுழியில்தானே யறுதிநாள்மூன்றதாமே. 168

பச்சிலையரைத்தாற்போலப் பலபலநிறமதைப்போல்
கெச்சிடிநாற்றமாகக் கழிந்திடில்நிசமாய்ரண்டே
வெச்செனத்தும்பிகொண்டு மிகமலஞ்சுவாயம்போல
மிக்கமாவிகற்பமாகில் வீழுநாளன்றுதானே. 169

மண்டையில்சலம்போல்நாறில் மதுவெனநீர்தான்வீழில்
நண்டுளேயடைந்துவீழில் சாவுசொல்மாதம்ரண்டில்
கெண்டியில்நீர்போல்வீழ்ந்து கீழ்துரையற்றதாலே
கண்டுகொள்மாதமேழிற் கழன்றிடுமரணமெய்யே. 170

குறிப்படிஆய்ந்துநீரில் குளிர்ந்துதானறியாதாகில்
அறிவொடுகழியுமாகி லகலுநாளாறுகமென்க
வெறிகமழ்மலர்ப்பூங்கோதாய் விளங்குமப்பலகுணத்தால்
செறியுயிர்மாளுமென்னச் செப்புவார்புவியுள்ளோரே. 171

இரும்பினில்மலர்ந்துகாய்ந்து எழில்முகங்கவிழ்ந்துக்கொண்டு
ஒருபுறஞ்சாய்ந்துகால்க ளுண்டியேமடக்கிக்கொண்டு
விருப்பொடுகருகிழுக்கு விரைந்துகைவைத்துக்கொண்டு
திரும்பியேதிரும்பிக்கொண்டு மருந்திடிற்சேர்வார்நோயில். 172

சார்ந்துகால்முடக்கிக்கொண்டு சந்தடியூடிகையைச்
சேர்ந்திடவைத்துக்கொண்டு சிக்கெனக்கல்கள்கட்டிப்
பாய்ந்திடுந்தவளைப்போலப் பரிவுடனிருப்பானாகில்
சாய்ந்திடுவார்கள்நோயி லென்றுதான்முன்னூல்சொல்லே. 173

நடக்கினிற்சொருபமன்றில் நடையதுதாழ்ந்ததாக
அடக்கமாய்நடப்பானாகி லகவினிற்றவர்வானாகில்
சடத்தெருபுரமேசாய்ந்து சத்தெனநடப்பானாகில்
திடப்படதெளிந்துகொண்டு நடக்கிலுஞ்சேர்வார்நோயில். 174

மலர்ந்துதான்கைகள்ரண்டு மார்பில்வைத்துறங்கலாலும்
நிலந்தனிற்கவிழ்ந்துகைகள் நெற்றிவைத்துறங்களாலும்
பலந்தரவிழித்தாற்போலக் கிடந்துறங்குதலாலும்
மிளங்கிளையனைத்தனைநோயில் விழுந்திடுவார்கள்திண்ணம். 175

வாயினுலூதலாலும் வருந்திப்பற்கடிக்கையாலும்
தீயதோர்நெடுமூச்சிட்டுச் சேர்ந்ததோராடிவன்னி
ஊயலாதுறங்கையாள் முருவகக்காலைமாலை
நேயமாய்த்துயில்வதானி நிச்சயம்நோயிற்சாவார். 176

மாலையில்நிசுகாலத்தில் வளர்விசைக்கடிகைதன்னில்
சாலவேபசியாம்போது சகசமாம்வேளைதப்பிப்



பாலெனுமமிர்தமன்னம் பண்புடனருந்துவோர்கள்
சாலமாய்நோய்க்குள்ளாகிச் சுழன்றுழன்றலைவர்மாதே. 177

சுடலையிற்கழுப்பக்கத்திற் சூழ்ந்தபேய்க்கூட்டத்தில்
இடமுறுகலவிசேரா ஷத்திரிசரசஞ்சொல்லாம்
அடிமையாய்த்தெய்வமுற்றோர் மகத்துவமுன்னோர்
விடமெனத்தூஷித்தாலும் வீழுவர்நோயில்மின்னே. 178

மருண்டவர்போலப்பேசுஞ் சினத்தை

மனதினிற்சூதையற்று வரும்பொறிகலக்கமாகி
நினைத்திடும்வெருட்சிகொள்ளில் நிறத்தசைவாயுவான்
மனத்தைவைகுணங்கள்காட்டி லெழும்பலநோய்களென்ன
வனத்தையுங்கருத்துஞ்சொல்லும் மகாமுனிகும்பன்சொல்வான்.

டப்பவமும்மலத்தி னுற்றதோர்மலத்தைப்பற்றி
நிரப்பவலத்திலாய்ந்து நிலைப்பிலாமதாராவார்
அதப்பவம்மும்மலத்தை யடுத்துமேவசமாய்நிற்பார்
முரப்பவமலத்தின்மேவார் முன்னில்லார்கோயிலன்றே. 180

ஆணவமனதினாலு மறிவிலாமல்கையாலும்
பூணுங்காமியத்தினாலும் பொறுப்பெருகோயில்வீழ்வார்
ஆணவம்பித்தமாசை யதுவாதமென்பார்மேலோர்
காமியஞ்சிலேற்பனமென்றுங் கருத்துடன்புகன்றதாமே. 181

சினத்தெழுங்கோபத்தாலுஞ் சிற்றின்பமிகுதியாலும்
கனத்திடுஞ்சுமைசுமந்து கருத்துவேறுகையாலும்
மனத்தெழுதுயரத்தாலும் வறுமைக்குளாகையாலும்
தன்வினைநோய்க்குள்ளாகி வேதனைப்படுவார்நாளும். 182

அப்பங்கன்மானநா ளிலைப்பசியானபோது
வெப்புறுவெளியிற்சென்றே விரைந்துதானடந்தநாளில்
செப்பியல்வாயார்போகங் கொள்ளவேநடந்தநாளில்
துப்பிதழ்மடவாரோடே தோய்ந்தவர்நோயிற்றேய்வார். 183

உண்டநீர்கொள்கையாலு முண்டபின்கொள்வதாலும்
இன்றலூன்குறைதலாலுஞ் சிறப்பிடுமெய்யினாலும்
நன்றியகல்விபோகம் நாளுமேகழித்தலாலும்
என்றுமேநோய்க்குள்ளாகி யிறந்திடுவார்கள்மாந்தர். 184

வியாதிக்கூறறியாடி

இப்படிவருநோயான வெண்ணிலாக்கட்டுட்சென்று
குப்புறவிழுமுன்னோடிக் கொள்பவர்மனிதரோகஞ்
செப்புவார்முனிதாமுன்னுள் செந்தமிழ்மாறிச்சூழ்ந்து
வப்பினிதுணர்ந்தோர்சேர்வார் நம்மொன்றும்வின்னவில்மாதே. ()

வேறு

நீர்மேகமானவர்க்கு நாடிதானும்
நிர்ணயமாய்நாடியெல்லாம் பொன்மைகேட்டு
கார்மேகம்போல்வந்த பொறியின்மீதே
கழன்றுவிழும்பொறிபோனு லோட்டிதானுஞ்
சீர்மேகஞ்செறிந்தென்றால் கருதுநூல்போல்
சிறிநிற்குங்குருநாடி சேர்ந்துதானும்
பேரமேகங்கடுத்திடுகில் வாதபித்தம்
பின்னியதுதுடித்துவரும் பிரிவுதானே. 186

கெர்ப்பிணிக்குவாதபித்தம் கிலர்ந்துகாணும்
கிராணியதிசாரமென்றால் தளர்ந்துகாணும்
உற்பவித்தசயமீனை காசரோகம்
உற்றிடுசிலேற்பனந்தான் மீறிக்காணில்
நற்பிடித்தரோகமது நலிந்துகெட்டு
நாவுலர்ந்துசயமீனை நாற்றம்ரோகம்
மற்பிடித்தவிஷநீருஞ் சோகைதானும்
வந்திடில்பித்தமுடன் சிலேற்பனமதாமே. 187

சிரரோகமானாலும் வாதபித்தஞ்
செறிந்துநிற்கும்நாடியது சிறித்தானே
விரரோகங்கிரந்திருஷ்ட மானபேர்க்கு
மீறிநிற்கும்பித்தம்ரண்டு வாதமொன்றும்
தாரோகஞ்சூலையொடு வாதரோகம்
சார்ந்திடுகில்வாதபித்தந் தழைத்துக்காணும்
வரரோகம்வாயுவென்றால் வாதங்காணும்
வாகாகவின்னதென்று அறிந்துபாரே. 188

உற்றதோர்கபந்தனக்குச் சேரும்பித்தம்
உறுதிபெருவிக்கனுக்குச் சேரும்வாதம்
மற்றதொருசுரந்தனுக்கு வாதபித்தம்
வகையானகலைதனக்குப் பித்தம்வாதம்
சித்தமொருமதகரிக்குப் பித்தமாகுஞ்
சீரானகௌசிரோகந் தனக்குப்பித்தம்
குற்றமில்லைபிதுமுறையைப் பகுத்துச்சொன்னேம்
கும்பமுனியருடனே நீ கூர்ந்துபாரே. 189

காணிகந்தில்வாதமென்றால் சிலேற்பனவாதங்
காணைசூலையானாலுஞ் சிலேற்பனவாதம்
விரணமுடன்நீர்ப்பாடு கோட்பாடானால்
விண்டிட்டநாடியெல்லாந் தளர்ந்துகாணும்
தாணமுறும்பாம்புவிஷங் கொண்டபேர்க்குந்
தாதுவெல்லாங்காணுமற் றளர்ந்துபோகும்



அரனுனவடமொழிநூ லுரைத்தவாறு
அறிந்துரைத்தோம்வயித்தியரா மறிவுள்ளோர்க்கே. ()

காணிகத்தில்சுரோணிதத்தின் வாதமானல்
கதித்துநிற்கும்வாதபித்தம் ரண்டிற்சேரும்
விரண்டுமொருமண்டைவலி வெடிசூலையாகும்
விகற்பமுடன்விஷநீர்கள் வறட்சிகாந்தல்
தருணமுழுமூக்கடைப்புத் தந்தரோகம்
சதையடைப்புச்செவிப்புற்றுப் பற்பரோகம்
மரணவரும்போதளவும் போகாதென்று
வயித்தியரேயிந்நூலை மகிழ்வித்தோமே. 191

முன்னாளிற்செய்தகுறை கர்மத்தாலே
முறையானவெளுப்புவருங் கர்மத்தாலே
இந்நாளில்விஷப்பூச்சி சென்னந்தானும்
இசைந்தவட்டையுடன்விஷ மெலுப்புதானும்
தன்னாளில்மிகுந்தபூக் குவிந்தசெங்கோன்
தான்கடித்தவிஷதோஷஞ் சாற்றக்கேளு
அந்நாளிற்புடையனெடு மண்ணுளியுஞ்சீண்டி
லதினாலேவருநோயை யுரைக்கேளே. 192

கால்தனிலேகடித்தாக்கால் திமிருண்டாகும்
கைதனிலேகடித்தாக்கால் விரற்குழகும்
மேல்தனிலேகடித்தாக்காற் றடித்துக்காணும்
மேன்மையுடன்றலைநீண்டில் சிரங்குபுண்ணும்
பால்சொரிந்ததாடைதொடில் பொரிந்துகாணும்
பாதத்தில்தான்தீண்டில் பலநோயாகும்
மேற்சிறந்தவிஷபூச்சி கடித்ததோஷம்
மெல்லியரேகுறையோயென் றுரைக்கலாமே. 193

விஷப்பூச்சிதோஷம்

பாழ்முறையால்குறைமுடிக்க வந்ததோஷம்
பாரிலுள்ளோர்பரிகாரஞ் செய்வதேது
ஊழ்வினையாலுடாடிக் கொல்லவந்த
உண்மையதுவறியாமல் பூசுஞ்செய்தாய்
தாழ்வினையுடனுவதில்லை கடினமாகும்
கற்றறிந்தபெரியோர்கள் கண்டுகொள்ள
ஆழ்வினைகளறிந்துமெள்ள வகன்றுபோவீர்
அரசருனையாரறியப் போகாதாமே. 194

விரல்குருங்கால்திமிராம் விஷம்போலேறும்
மெய்யருந்தலைசுழலும் வியர்க்குமேனி

பால்போலத்தேகமெல்லாந் தடித்துக்காணும்
 பதருபோல்வெளுத்துமிகப் புண்ணுமாகும்
சரசமுடன்பொரிகரப்பான் போலேதோன்றும்
 சத்தைதரும்விந்தைகெடுந் தடித்துவீங்கும்
நாருலகிற்பூசைசெய்ய வேண்டும்சொன்னேம்
 நாடிவந்தகுறைநோவு நாவிற்றுமே. 195

கற்புடையமங்கையரை விருப்பமுற்றுக்
 கைம்மருந்திட்டுமிகக் கர்மத்தாலே
மூத்பிழையாற்குறைசெய்வ கருமத்தாலே
 மூளுவதுபாவந்தான் சிலந்திபோலே
அப்புடனேசிலந்திவண்டு கடித்ததோஷம்
 தொல்லுலகில்யாராலுந் தொலைக்கப்போகா
நற்புடனேயிதுவறிந்து பரிகாரங்கள்
 [illegible]மையுடன்பலந்திரத் தவங்கள்செய்யே. 196

காகம்போல்தேகமது கறுத்துக்காணும்
 கனத்தநடுவுடல்குளிர்ந்து தடித்துச்சற்றும்
ஆகம்போலிரத்தமெல்லாம் வெந்துபோகும்
 ஆக்கையுறும்பத்னில்மிக வசைந்துபோகும்
கூசமதுகால்கரங்கள் நடக்கில்மெத்த
 கொடியநீர்விஷகரப்பன் கொள்கைபோல
பேதமதுமுற்பிழையால் மிகுந்தபாவம்
 பெரியோரைதூஷித்த பேதந்தானே. 197

நல்லோர்கள்பெரியோர்கள் நடத்துஞ்செய்கை
 நாட்டிலுள்ள துஷ்டசனம் நகைத்ததாலே
பொல்லாதவிஷக்கடிகள் வந்துபுக்கிப்
 பொன்மையுள்ளதேகமெல்லாம் குஷ்டம்போலே
செல்லாதவிஷகடிகள் விஷகுன்மம்பாண்டு
 தீராதகன்மவினை செய்தபாவம்
எல்லாருங்காணவிது புவியின்மீதே
 இணங்கிவந்தகடிவிஷங்க ளியம்பலாமே. 198

ஆரறிவார்பெரியோர்கள் செய்கையெல்லாம்
 அம்புவியிலுபமானப் பொருளறிந்தால்
ஊரறியப்போறிய வுலகமெல்லாம்
 உடனகைத்துச்சிரிக்கவென் றுலகப்பேய்கள்
சீரறியச்சிறியோர்கள் பெரியோர்தம்மை
 சிரித்துநகைத்திடவெகு பாவத்தாலே
கோரியாவிஷக்கடிகள் போலேவந்து
 சேர்ந்துபலவிதமான நீசந்தானே. 199



உலகதனில்செவிடூமை குருடர்தாமும்
 ஊக்கமிலாச்சப்பாணி மூக்கிலாதான்
நல்குமதுவிஷக்கடி குன்மம்பாண்டு
 நத்திவரும்பெருவயிறு கலங்கியீளை
இலகுமதுபெரியோரைக் கற்புள்ளோரை
 ஏக்கமிலாச்சிவஞானி பொருளுள்ளோரைத்
துலங்குமவர்தன்னைமிகத் தூடித்தாக்கால்
 தூர்ச்சரார்க்கிந்நோயைத் தொகுத்தார்தாமே. 200

வேறு

வன்னியேமிகுத்துதானும் வாயுவைநெருக்கும்போது
உன்னியேயுதரம்விம்மி யுறுகுடல்வெந்துபின்னும்
பின்னுமேயங்கருலே பெருத்திடவுதரஞ்சாய்ந்து
துன்னியேவாய்வுமோதுஞ் சுரோணிதங்கெடுதியாமே. 201

கண்டத்தில்வாயுபுக்கிக் கபாலத்தைசூழ்ந்துகட்டித்
துண்டத்தில்மேல்ரப்பை சேரமுடல்சார்ந்துபின்னி
அண்டத்திற்கனலாய்ப்பற்றி யனலதுசிரசில்மூட்டிக்
கொண்டுற்றகணிதத்தின் சுரோணிதங்கெடுதியாமே. 202

நல்லதோர்நாடிதானு மிடையொடுசுழியும்பற்றிச்
சொல்லியகுதத்திஞேடுஞ் சூட்சமாய்வினையினேடும்
வல்லவஞ்சேர்ந்துவன்னி வாய்வொடுகபமுஞ்சேரில்
சொல்லியமருந்துசொன்னேஞ் சொக்கியதவங்கண்டோமே. 203

மார்பினிலுதரந்தங்கி மருண்டுதான்சபத்தைசார்ந்து
வார்வொடுதளர்ச்சியுந்தான் வறட்சியுமிகவேகாட்டிச்
சீரொடுநரம்பினேடு திசையொடுயெலும்புசார்ந்து
பேர்பெருவனலில்ரோகம் பெருத்துறுவிதங்கடானே. 204

அக்கினியெரித்தருடு ஆதாரம்மாறும்பற்றிப்
பிக்கியேநரம்புதானும் பொன்மயங்கெட்டேதான்
தொக்கியேகபாலமூட்டித் துன்புறுப்பாத்துமேவித்
தக்குமாஞ்சோம்பல்ரோகங் கருத்துள்ளேகண்டுசொல்லே. 205

தாக்கியேமூலந்தன்னில் தருக்கியவாயுவோடே
நோக்கியேவன்னிதானும் நவலியேயுதரஞ்சார்ந்து
தீய்க்குமாமலமுங்கட்டிச் சேரும்நீர்சுவறிவா
வாக்கியம்பேசுஞ்சொன்னேன் மயக்கமாமூர்ச்சையாமே. 206

விஷகரப்பன் வேறு

சங்கையில்லாவிஷக்கரப்பன் வரலாறுரைக்கின்
 சரசமுறுங்கிருமியுருத் தகைமையேது

பொங்கியங்கேயூனுருவிக் கிராணியேது
பூராயமானதொரு பௌத்ரமேது
நங்கையர்கள்போகமுறு மேகமேது
நவிலவொண்ணாக்கிரந்தியது ரோகமேது
கங்குல்பகலவருங் காந்தலேது
கருத்துடனேயிருந்தவகைக் கருமங்கூறே. 207

உஷ்ணமேதுகுத்துவரும் ஸ்திரீபோகத்தால்
ஊனுருவியஸ்தியிலே வேவுகொண்டு
கட்டமாய்வந்ததொரு மச்சைதன்னில்
நாட்டமுண்டாய்க்கிருமிதென்று நணுகும்போது
மட்டுறவேகிருமியெல்லாம் பறந்தங்கேறி
வகையுடனேமாமிசத்தைத் துளைத்துமேவுந்
திட்டமுடன்வினிகரப்பன் பரந்துமேவித்
தினவுடனேபரபரத்துத் தினவுண்டாமே. 208

சுக்கிலந்தானுட்டினத்தில் வேவுகொண்டு
குதானமலக்கட்டுக் கட்டுப்பட்டால்
அக்குலத்தின்மலமதிலே நாற்றமுண்டாம்
அழுகியங்கேவெந்துருகி வாழும்போது
சிக்கிமலந்தான்புழுத்துக் கிருமியுண்டாம்
தீபனங்கள்சென்றதனாற் கிருமியெல்லாம்
பக்கியங்கேபகுந்தேறிச் சரீரமெல்லாம்
பரபரந்தூர்ந்தேறும் பகைமையாமே. 209

வயிற்றனிற்பூரகந் தன்னைச்சார்ந்து
வருந்தியதுபுற்றுப்போற் பற்றிக்காணும்
எழும்பியதுகிருமிதா னிடைந்துபுக்கில்
இயல்பெருகுங்குழல்மடவாய் சொல்லக்கேளு
கயிர்முறுக்கிவிட்டாற்போல் தேகந்தன்னில்
கறகறத்துச்சொறியாகிக் காணுஞ்சீழ்நீர்
உயர்பெருகும்பண்டிதரே கரப்பன்செய்யும்
உறுதிதனைநன்றாக வுணிப்பாரே. 210

கிருமியினால்வருந்தோஷம் பெருகவுண்டு
கேட்கிலதன்பிரிவுதனைக் கிரமமாகப்
பொருமிவரும்வாயுவெல்லாங் கிருமியாலே
புழுக்கடிபோல்காண்பதுவுங் கிருமியாலே
செருமிவரும்பௌத்திரங்கள் கிருமியாலே
தேகமதுசொறிகுட்டங் கிருமியாலே
துருமிவருஞ்சுரோணிதமுங் கிருமியாலே
குட்சமுடன்கிருமியதைத் தொழில்செய்வீரே. 211



குஷ்டமதுவிஷகரப்பான் விளநீர்க்கோவை
கொடுஞ்சூலைசுரோணிதத்தால் தாதுகெட்டு
மட்டறவேகிருமிசென்று மருவும்போது
வகைவகையாய்க்கிருமியிட விடநீர்சென்று
துட்டனந்தத்தேகமெல்லாம் பார்க்கும்போது
சுழிசுழியாய்க்கிருமிநீர் துன்னிக்கொள்ளுங்
கட்டுறவேகிருமியுட நீரில்வந்த
கருங்குஷ்டம்விடகரப்பான் கருதிப்பாரே. 212

மலக்கிருமிநீர்க்கிருமி மஞ்சட்கிருமி
வாற்கிருமிகருங்கிருமி மண்டைக்கிருமி
தலக்கிருமிசூறைக்கிருமி சுரோணிதக்கிருமி
தலக்கிருமிகணக்கிருமி தாதுக்கிருமி
சொலப்பெரியவாய்க்கிருமி பலக்கிருமியோடு
சுக்கிலத்தைசென்றறுக்குஞ் குதக்கிருமி
புலக்கிருமிபுனக்கிருமி சூலைக்கிருமி
புகழ்வொன்பான்குணத்தைப் பிரித்துப்பாரே. 213

மலக்கிருமிகுடல்தனிலே மருவிநிற்கும்
மற்றதொருநீர்க்கிருமி விடநீர்மேவுந்
தலக்கிருமிநரம்பின்மேல் துள்ளிநிற்கும்
சுக்கிலத்தின்கிருமியது தாதுகேடாம்
வலப்பெரியவாற்கிருமி யுதட்டிசேரும்
மண்டையினிற்கிருமியது சிரத்திலேறும்
நலம்பெரியவாய்க்கிருமி யுதட்டிசேரும்
நயனதுபற்றிநிற்குங் கிருமியாமே. 214

ரத்தமதுபொறுத்துமந்த மஞ்சட்கிருமி
யியல்பானகருங்கிருமி யெங்குமேவும்
மத்தசிறகதின்மேவுஞ் சூரக்கிருமி
பரிவாசமீறிவருஞ் சுக்கிலக்கிருமி
அந்தணர்தம்பதம்போற்றி யறிவுள்ளோர்கள்
ஆராய்ந்துகிருமியறிந் தவிழ்தஞ்செய்யில்
சித்தியாம்வயித்தியரே தேர்ந்துபாரும்
திகழ்கிருமியாவுமெழுந் தேகும்பாரே. 215

புலக்கிருமிமூலத்தி லுறுகுங்கண்டாய்
புனக்கிருமிபுண்ணாக்கும் புகழ்ந்துசொன்னோம்
சிலக்கிருமிராக்ஷதர்போற் கிருமியேறுஞ்
சிரானகிருமியாவற்றுந் தேர்ந்துபார்க்கில்

நலக்குறியுங்குணங்கள்முதல் நன்றாய்ந்து
நாதனிருதாள்போற்றி நன்மையாக
இலக்குரியபண்டிதரே கிருமிதானும்
இயல்பறிந்துபரிகார மேற்றுவீரே. 216

கிராணிவருமாறு

கேளுமினிகிராணிவந்த செய்கைதானும்
கிருமையுடன்மூலத்தில் வேவுகண்டு
நாளுமிதுகிருமியினாற் குடலேதின்ன
நாற்றமுண்டாஞ்சுரோணிதந்தா னலமுங்கெட்டு
மீளுவதுவாயுவங்கே விரவிநின்று
மேவிடிற்கிருமியெல்லாம் விரைவில்தானே
கோளுமதுபலவிதமாய்க் கழியுமப்பால்
குடிகெடுத்தகிருமிசெய்த கிராணிதானே. 217

கிராணிபதின்வரலாறு உதரந்தன்னில்
கிரிச்சனமாய்ப்புசித்துவரும் பதார்த்தத்தாலும்
கிராணியிடகுடல்தனிலே போடிநின்று
கிறுகிலென்றவாயுவங்கே யிரைச்சலாகிக்
கிராணியதுகொண்டுதான் வயிறுவூதிக்
கழியுமதுபொருமலமாம் விதம்வெவ்வேறும்
தாணியிடந்தூர்ப்பலமா யலைச்சல்பட்டுச்
சலமலமும்பலவிதமாய்ச் சாயுந்தானே. 218

வேறு

சொல்லுடன்சூட்சநாடி சுடரொளிபோற்காணி
வெல்லுவேன்புவியுள்ளோரை விதமுறு நாலினாலே
மல்லுவேன்சாஸ்திரத்தை வகைவகையாகப்பாடிக்
கல்லதைக்கரைத்தாற்போல நூல்களைக்கருதிப்பாரே. 219

வேறு

அகாரமுதலைம்பத்தோ ரெழுத்துந்தானாய்
ஐந்தெழுத்துமெட்டெழுத்து மதுவேயாகும்
விகாரமுடனிலைவிலொளி வதுவேயாகும்
விகாரமுடனாதார மாறேழாகும்
உகாரமுடன்தத்துவங்கள் தொண்ணூற்றாறும்
உற்றுநிற்குங்குருநாடி யொன்றுபோலச்
சிகாரமெனுஞ்சடாக்ஷரத்தை மூலநாடி
சிவசிவாவென்றதிலே தெளிந்துபாரே. 220



ஒன்றுக்குமெட்டாத நாடிநே
ஊடுருவித்தாண்டிநிற்கு முண்மைகேளு
வண்டுகருநேர்மைபோல் வருகும்பித்தம்
மருவியேசிலேற்பனத்தில் மதுவுண்டாற்போல்
என்றைக்கும்வாதபித்தம் நடுவேநிற்கும்
ஏறுவதுங்குறைவதுவு மில்லைசொன்னோம்
கன்றுக்குப்பாலிறங்கும் நேர்மைபோலக்
காத்திருக்குங்குருநாடிக் காலைப்பாரே. 221

வேறு

உற்றதோர்வாதந்தன்னி லுறுதியாய்க்கீழுமேலும்
பற்றியேமுன்னும்பின்னும் பதிந்துதான்பயணஞ்சார்ந்து
சுற்றியேவிசையினூடே சுழிமுனைதன்னைநோக்கும்
குற்றியேதம்பூருவீணை குறியெனக்கொள்கைபாரே. 222

நாடிடுந்தம்பூருதன்னில் நரம்பிசைகளுந்தந்தி
கூடிடுந்தந்திதன்னைக் குறியெனத்தெறிக்குமாபோல்
ஓடிடுமசையில்நாடி யுன்னியேபதியவொன்று
சாடிடுநாடிதானுந் தான்குருநாடியாமே. 223

தந்திக்குத்தந்திவெவ்வேறு நாதமும்பலதரம்போலக்
குந்திக்குவாதபித்த மையமுங்கொள்கைபோல
வந்திக்கும்விதங்களெல்லாம் வகையெழுதம்புருவீணை
விந்தைக்கும்விங்கணுடி விவரந்தானறிந்துபாரே. 224

மந்தமுஞ்சுருக்குஞ்சாந்தம் மதிதருங்கோபமேகம்
இந்துவைநாதம்போல விசைக்குமந்நாடிகண்டாய்
உந்தியவாதநாடி முழுதுமேசாந்தமாகும்
மந்தமாய்சேத்மநாடி மகிழ்சுரைப்பித்தமாகும். 225

மாந்தமுஞ்சுக்கிலந்தான் வகையுடன்வாதபித்தம்
முந்தவேசாந்தமேகம் முற்றிடில்வாதஞ்சிலேற்பம்
அந்தமாஞ்சாந்தசீதம் அப்படிபதியுஞ்சிலேற்பம்
விந்தமாங்கோதுகோசம் விளங்கிடிற்பித்தஞ்சிலேற்பம். 226

நளினமாஞ்சாந்தங்கோபம் நாட்டியசிலேத்மம்வாதம்
விளினமாஞ்சிறந்தசாதம் மேவிடிற்பித்தம்வாதம்
குளினமேகூறுமேவுங் குணந்தனைப்பிரித்துப்பார்க்கில்
தெளினமாம்நரம்பினோசை சென்னியில்கூர்ந்துபாரே. 227

இப்படியொன்றுமைந்து விதனுடனேழுமாகிச்
செப்பினேந்திசையில்நாடிச் செயம்பெருங்குணங்களெல்லாம்

ஒப்புடனுரைகள்செய்தே னுலகினிலறியவேண்டி
வைப்புறுபொதிகைவாழு மருள்முனியுரைசெய்திரே. 228

குருநாடியென்றுதானே குறிப்புடன்பதிதாணகுக்
திருநாடிசொல்லக்கேளீர் சிவனயன்மாலுமாகும்
வருமோடிபஞ்சநாடி வகையுடனெழுத்தஞ்சாகுந்
தெருமோடிசந்த்ரநாடி சனத்தொளிர்சதமெனும்பே. 229

சொல்லியநரம்புதானும் தோற்றபின்கலையினோடு
வல்லிசிங்குவைகாந்தாரி வகுப்புடன்புருடன்தானும்
வெல்லியபிரமதேவன் விளங்கிடும்த்தியோடு
புல்லியசிதாங்கனோடு போற்றுறுநாடியாமே. 230

இடையொருநாடிதானு மிசைந்திடும்வலதுகாலில்
அடைவுடன்சுற்றியேறி யமர்ந்திடும்வீணைத்தண்டில்
மடமயில்மானேயின்னு மிடதுகண்தன்னைநோக்கி
உடலெனவோடிநிற்கு முண்மையையறிந்துகொள்ளே. 231

பின்கலையானநாடி யிடதுகால்தன்னைப்பற்றி
முந்தவேசுற்றியேறி வலதுகண்தன்னைமூட்டும்
பின்கலைசுழினைநாடி மூலத்தைப்பற்றிநின்று
அன்பெனச்சுழுமுனையி லயர்ந்துதானஞ்சுண்டாமே. 232

அத்தியாம்நாடிதானு மமர்ந்திடுமெலும்பைப்பற்றி
சித்தியாஞ்சிங்குவைநாடி சேர்ந்திடுநாவைப்பற்றி
முத்திரைகாந்தாரிதானும் மூக்கினைப்பற்றிநிற்கும்
கத்தியேயலம்புரிக ளாற்சதாத்தில்நிற்கும். 233

பூமகள்புருடன்றானும் புரையறவுந்திலாறும்
நாமகன்பிரமன்றானும் நாடியபாம்புசேரும்
கோமகள்சீதாதேவி கொடுமுடிமேவிநிற்கும்
வாமகளிவைகட்கெல்லாம் பொருந்துருவகையைப்பாரே. 234

சொன்னார்நாடியிருநூறு தோற்றன்பத்தைந்தினிலே
அன்னைதனக்குஅரனாரு மன்பாயெடுத்துத்தானுரைத்தார்
முன்னோராயுள்வேதமிது முழுதும்நாடிதானுரைத்தார்
பன்னோமாந்தர்க்குறுதியுடன் பகர்ந்தார்முனிவர்முற்றுமே. 235

அகஸ்தியர் அருளிச்செய்த
குருநாடி சாஸ்திரம்
முற்றிற்று.

# திருக்குறள் மூலமும்

[பரிமேலழகர் உரையும், அவ்வுரையைக் கொண்டு இயற்றிய பதவுரை கருத்துரை விசேடவுரையுடன் திரிசிரபுரம் செயிண்ட் ஜோஸப்ஸ் காலேஜ் தமிழாசிரியர் வித்வான் (Orient) R. மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் எழுதிய இலக்கண குறிப்பும் சேர்த்து நாயனார் திருவுருவப்படத்துடன் கிரௌன் கடிதத்தில் 1068 - பக்கங்களுடன் அச்சிட்டு பயின்டுசெய்தது. விலை ரூபா-5]

தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் அருளிச்செய்த திருக்குறளாகிய இந்நூல், எக்காலத்தும் எம்மதத்தினருக்கும் சம்மதமாகிய பொதுநூலென ஒப்ப முடிந்த முடிவுடையதாகும். இது உலகியலில் மக்கள் ஒவ்வொருவரும் அடையத்தகு பயன்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கையும் அடைதற்குரிய கருவிநூலாகும். இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் ஆக பால் 3-ம் அதிகாரம் 133-ம் 1330-குறள் வெண்பாக்களையுடையது. எம்மொழியினுஞ் சிறந்த உயர்தனிச் செம்மொழியாகிய இத்தமிழ்மொழியின் மேன்மையும், சொற்சுவையும், பொருட்செறிவும் போற்றற்குரியன.

தமிழ்நூல்களில் பண்டைப்பழமைவாய்ந்த இலக்கிய நூலாகக் கருதப்படுகின்ற இத்தகைய நூலைக் கற்பதனால் நமது பழந்தமிழ்மக்களாகிய முன்னோர்களின் கல்வி, அறிவு, ஒழுக்கம், நாகரிகம், வேளாண்மை, கைத்தொழில், அரசியலுணர்ச்சி ஆகிய இவற்றிற்கு ஏற்ற அளவற்ற பெரிய அறிவும், கற்பை அணிகலமாகப்பூண்ட பெருமையுடைய மகளிரின் மேம்பாடும், மற்றும் இவைபோன்ற பிறவும், இத்தகையனவென்று உணர்தற்கு இடமாயுள்ளதாலும், செவ்விய உலகியலறிவைப் பெற விரும்புவோர் ஒவ்வொருவரும் இதனைக் கற்கவேண்டிய தனியமான தாதலும், தமிழ்மக்களுக்கே உரிய தமிழ்மறையாகத் திகழ்வதாலும்; இந்நூலுக்கு உரைகண்டோர் பதின்மரினும் பரிமேலழகியார் உரையே மிகச் சிறந்ததெனப் பாராட்டப்படுவதாலும், அவ்வுரைக்கு உரை தெரிந்தாலன்றிப் பொருளறிவது இயலாமையாலும் இந்நூலின் கடின சந்திகளையெல்லாம் பிரித்து விளக்கி, மேற்கோள்களுடன் விரிவுரையென்னும் புத்துரையொன்று சேர்த்து உலகிற்குப் பயன்படுமாறு வெளியிட்டுள்ளோம்.

எமது விலாசம்:

அ. இரங்கசாமிமுதலியார் ஸன்ஸ்,

24, தாண்டவராயப்பிள்ளைத் தெரு, சென்னை.